உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

e-magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

## திரு உத்தரகோசமங்கை திருக்கோவில் கும்பாபிஷேக சிறப்பு மலர்




# வரம்தரும் அம்மன் ஆலயங்கள்

சிறப்பிதழ்


DEEPIKA
BUILTECH ENGINEERING
ராமநாதபுரம் மாவட்டம்
உத்திரகோசமங்கையில் அமைந்துள்ள
திருஉத்திரகோசமங்கை
மங்களநாதசுவாமி திருக்கோவிலின்
மகாகும்பாபிஷேகம்
நாள்: 04.04.2025 வெள்ளிக்கிழமை
காலை 9.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் நடைபெறும்
திருக்கோவில் கும்பாபிஷேக விழாவிற்கு
வருகை தரும் பக்தர்கள் அனைவரையும்
வருக! வருக!! என வரவேற்கிறோம்
DEEPIKA BUITECH ENGINEERING
AND
SKYLIFT ENTERPRISSES
SABAPATHI CEO
PH:9884487938
www.deepikabuiltech.com
New No.31,31A, Old No.14,15 Coromandal Town, SIDCO
Industrial Estate, Ambattur, Chennai-600098

# உத்தரகோசமங்கையில் இடம்மாறி அருளும் விநாயகப்பெருமான்





விதவிதமான வழிபாட்டு முறைகளை ஏற்றுக் கொள்ளும் ஒரே தெய்வம் விநாயகப்பெருமான் மட்டுமே, அந்த வகையில் ஒருசில கோவில்களில் வித்தியாசமான விநாயகப் பெருமானும் வழிபாட்டு முறைகளையும் இன்றளவும் காணப்படுகிறது.

## தாலி கட்டிக் கொள்ளும் விநாயகர்

தாலி பெண்களுக்கு உரிதானது, என்றாலும் மதுரையில் உள்ள ஒரு விநாயகருக்கு, தாலி கட்டி அழகு பார்க்கிறார்கள் கன்னிப் பெண்கள். இந்தச் சடங்கு மதுரை வடக்கு மாசி வீதி, மேல மாசி வீதி சந்திப்பில் உள்ள நேரு ஆலால சுந்தர விநாயகர் கோவிலில் நடக்கிறது. கன்னிப்பெண்கள், தங்களின் வயதுக்கேற்ற எண்ணிக்கையிலான விரலி மஞ்சளைத் தாலிக் கயிற்றில் கட்டி விநாயகருக்கு அணிவிக்கிறார்கள். ஒவ்வொரு வெள் ளிக்கிழமையும் இவருக்கு தாலி கட்டி பிரார்த்தனை செய்து கொண்டால், கிரக தோஷம் நீங்கி நல்ல கணவர் அமைவார் என்பது நம்பிக்கையாகும்.

## உத்தரகேசமங்கையில் இடம்மாறி அருளும் விநாயகர்

நவகிரகங்கள் தோன்றுவதற்கு முன்னரே உருவான கோயில். நான்கு யுகங்கள் தோன்றுவதற்கு முன்னரே உரு வான ஆலயம். ஆயிரம் சிவ அடியார்கள் ஒரே சமயத்தில் மோட்சம் பெற்று சகசுவர இலிங்கம் உருவாக்கிய ஆலயம். என்று அறியப்படும் உத்தரகோசமங்கை சிவஸ்தலத்தில் இன்னும் ஒரு சிறப்பு உள்ளது.

உத்தரகோசமங்கை சிவஸ்தலம் அமைந்துள்ள கோயில் வாசலில் விநாயகப்பெருமானும், முருகப்பெருமானும் இடம் மாறி பக்தர்களுக்கு காட்சியளிக்கின்றனர். இது வித்தியாசமான அமைப் பாக விளங்குகிறது. அதேபோல், முருகனுக்கு வாகனமாக யானை உள்ளது. முருகப்பெருமானுக்கு இந்திரன் தனது ஐராவதத்தை இத்தலத்தில் அளித்தான் என்று ஆதி சிதம் பர மகாத்மியம் எனும் புராதனமான நூல் விவரிப்பதைச் சுட்டிக் காட்டுகின்றனர். வரலாற்று ஆய்வாளர்கள்.

## திருஉத்தரகோசமங்கை திருக்கோவில் கும்பாபிஷேக விழா

இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம் திருஉத்தரகோசமங்கை அருள்மிகு மங்களேஸ்வரி உடனுறை அருள்மிகு மங்களநாதசுவாமி திருக்கோயில் அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகவிழா 04.04.2025 அன்று நடைபெறவுள்ளது.

சேதுபதி மஹாராணி திருமதி. RBK.இராஜேஸ்வரி நாச்சியார் B.A., சேதுபதி மஹாராணி திருமதி. Er.V.அபர்ணா நாச்சியார் MS., பரம்பரை அறங்காவளர். தலைமையில் நடைபெறுகிறது. யாகசாலை பூஜை நேரங்களில் சதுர் வேத பாராயணம், சிவாகம பாராயணம் மற்றும் திருமுறை பாராயணம் நடைபெறும்.

## கோவில் நடைதிறப்பும் நித்திய கால பூஜை நேரமும்

திருவனந்தல்: காலை 6 to 7 விளா பூஜை காலை 7 to 8

காலசந்தி: காலை 9 to 9.30 உச்சி கால காலை 12 to 12.30

சாயரச்சை: மாலை 5 to 6 அர்த்தசாம பூஜை இரவு 8 to 8.30

**கோவில் நடை திறந்திருக்கும் நேரம்:**

காலை 4 முதல் 12.30 வரை

மாலை 4 முதல் 8.30 வரை



aanmeegamalar.com

### 60 ஆயிரம் சிவனடியார்கள் ஞான உபதேசம் பெற்ற ஸ்தலம்

### உலகில் உள்ள 1087 சிவாலய அருட் சக்திகளைக் கொண்ட ஸ்தலம்

### ஒருமுறை சென்றாலும் சொர்க்க வாசத்தை தரும் ஸ்தலம்

# திருஉத்ரகோசமங்கை திருக்கோவில்

சிவனின் சொந்த ஊர், உலகிலயே முதல் நடராஜர் தோன்றிய ஊர், உலகின் உள்ள அனைத்து ரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள் வந்து வழிபாடு செய்த கோவில்.

நவகிரகங்கள் தோன்றுவதற்கு முன்னரே உருவான கோயில். நான்கு யுகங்கள் தோன்றுவதற்கு முன்னரே உருவான ஆலயம். ஆயிரம் சிவ அடியார்கள் ஒரே சமயத்தில் மோட்சம் பெற்று சகஸ்கர லிங்கம் உருவாக்கிய ஆலயம்.


3000 ஆண்டுகளாய் பூத்து குலுங்கும் இலந்தை மரம் உள்ள ஆலயம்.

தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்ற வாக்கியம் உருவான இடம்.

மரகத நடராஜர் சிலை உள்ள ஆலயம். இப்படி பல அதிசயங்களையும், ஆச்சயர்களையும் தன்னகத்தே கொண்டு சாந்தமாய் இருக்கும் ஆலயம் அதுதான் இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள திருஉத்ரகோசமங்கை மங்களநாதார் மங்களநாயகி திருக்கோவில்.

தவறாமல் இத்திருக்கோவிக்கு ஒருமுறையாவது சென்று வாருங்கள்.





## உத்தரகோச மங்கை புனித தல சிறப்பு தகவல்கள்

- உத்தரகோச மங்கையில் உள்ள மூலவர் சுயம்பு லிங்கம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியதாக கணிக்கப்பட்டுள்ளது.
- உத்தரகோச மங்கை கோவில் சுமார் 20 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.
- உத்தரகோச மங்கையே சிவபெருமானின் சொந்த ஊர் என்று அழைக்கப்படுகிறது.
- இத்தலத்துக்கு உமா மகேசுவரர் சன்னதி முன்பு நின்று வழிபாடுகள் செய்தால் தம்பதியர் ஒற்றுமை பலப்படும்.
- திருவிளையாடல் புராணத்தில் வரும் ‘வலை வீசி மீன் பிடித்த படலம்‘ இத்தலத்தில்தான் நடந்தது.
- உத்தரகோச மங்கை கோவிலில் முக்கிய திருப்பணிகளை பாண்டிய மன்னர்களே செய்தனர். பாண்டிய மன்னர்கள் ஆட்சி அதிகாரத்தில் சிறந்து இருந்த போது, அவர்களது. தலைநகராக சிறிது காலத்துக்கு உத்திரகோசமங்கை இருந்தது.
- ஆதி காலத்தில் இந்த தலம் சிவபுரம், ‘தெட்சிண கைலாயம்‘, சதுர்வேதி மங்கலம், இலந்தி கைப் பள்ளி, பத்ரிகா ஷேத்திரம், பிரம்மபுரம், வியாக்ரபுரம், மங்களபுரி, பதரிசயன சத்திரம், ஆதி சிதம்பரம் என்றெல்லாம் வேறு வேறு பெயர்களில் அழைக்கப்பட்டது.
- மங்கள நாதர், மங்கள நாயகிஇருவரையும் வழிபடும் முன்பு அங்குள்ள பாண லிங்கத்தை தரிசனம் செய்தால் முழுமையான பலன்கிடைக்கும்.
- இத்தலத்தில் வழிபாடுகள் செய்பவர்களுக்கு இம்மையில் அனைத்து நன்மைகளும் கிடைக்கும். மறுமையில் முக்தி கிடைக்கும்.
- மங்கள நாதர் தலத்தில் திரு மணம் செய்தால் நிறைய மங்களம் உண்டாகும் என்பது ஐதீகம். எனவே முகூர்த்த நாட்களில் நிறைய

ஸ்ரீ நாச்சாயி அம்மன் துணை, ஸ்ரீ தர்ம சாஸ்தா துணை



திரு உத்திரகோசமங்கை
திருக்கோவில் மகா கும்பாபிஷேக
விழாவிற்கு வருகை தரும்
பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்



# வாசுதேவன் பாத்திரக்கடை

முகவையின் மபெரும்
பாத்திரக்கடை

வாசுதேவா என்றால் வளம் பொங்கும்!
வாசுதேவன் பாத்திரத்தில் ராசி பொங்கும்!!



கல்யாண சீர்வரிசைக்கு தேவையான
பாத்திரங்கள், கிரைண்டர், மிக்ஸி, குக்கர்,
கேஸ் ஸ்டவ் மற்றும் அனைத்தும்
வாங்க கைராசியான நிறுவனம்



12,பி.கே.சாமி தெரு, இராமநாதபுரம்

போன்: 04567220 209, செல்: 88074 08807


aanmeegamalar.com

திருமணங்கள் இத்தலத்தில் நடைபெறுகின்றன.

- மூலவருக்கு மங்களநாதர் என்ற பெயர் தவிர மங்களேசுவரர், காட்சி கொடுத்த நாயகர், பிரளயாகேசுவரர் என்ற பெயர்களும் உண்டு.
- இறைவிக்கு மங்களேசுவரி, மங்களாம்பிகை, சுந்தரநாயகி ஆகிய பெயர்கள் உள்ளன.
- இறைவி மங்களேசுவரி பெயரில் வ.த. சுப்பிரமணியப் பிள்ளை என்பவர் பிள்ளைத் தமிழ் பாடியுள்ளார். 1901ம் ஆண்டு வெளியான அந்த நூல் 1956ம் ஆண்டு மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டது.
- இத்தலத்தில் உள்ள கல்வெட்டுக்களில் ராவணனின் மனைவி மண்டோதரி பெயர் இடம் பெற்றுள்ளது. எனவே இத்தலம் ராமாயண காலத்துக்கும் முன்பே தோன்றியதற்கான ஆதாரமாக இந்த கல்வெட்டு கருதப்படுகிறது.
- இத்தலத்தில் வேதவியாசர், காக புஜண்டர், மிருகண்டு முனிவர், வாணாசுரன், மயன், மாணிக்கவாசகர், அருணிகிரிநாதர் ஆகியோர் வழிபட்டு ஈசன் அருள் பேறு பெற்றுள்ளனர்.
- இத்தலத்து பஞ்சலோக நடராஜர் மிகவும் வித்தியாசமானவர். இவர் வலது புறம் ஆண்கள் ஆடும் தாண்டவமும், இடது புறம் பெண்கள் ஆடும் நளினமான கலைப்படைப்பாகஉள்ளார்.
- இத்தலத்து முருகனுக்கு வாகனமாக யானை உள்ளது. முருகப்பெருமானுக்கு இந்திரன் தனது ஐராவதத்தை இத்தலத்தில் அளித்தான் என்று, இத்தலமான்மியமான ‘ஆதி சிதம்பர மகாத்மியம்’ கூறுகிறது.
- ராமேஸ்வரத்தில் இருந்து 83 கிலோமீட்டர் தொலைவிலும், ராமநாதபுரத்தில் இருந்து 18 கிலோமீட்டர் தூரத்திலும் இவ்வாலயம் இருக்கிறது.
- சங்க இலக்கியத்தில் குறிக்கப்படும் “இலவந்திகைப் பள்ளி” என்பது உத்தரகோச மங்கையைக் குறிக்கும் என்கிறார்கள். மேற்குறித்த கல்வெட்டில் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் பெயரும் செதுக்கப்பட்டுள்ளது.
- மாணிக்கவாசகருக்கு உருவக் காட்சிதந்த சிறப்புடைய தலம்.
- இலந்தை மரத்தடியில் எழுந்தருளிய மங்கைப்பெருமான் என்று இப்பெருமான் போற்றப்படுகிறார்.
- இத்தலத்தில் சுவாமியை அம்பாள் பூசிப்பதாக ஐதீகம்.
- சொக்கலிங்கப் பெருமான் பரதவர் மகளாகச் சபித்துப் பின் சாபவிமோசனம் செய்து அம்பாளை மணந்துகொண்டு இத்தலத்திலேயே அம்பாளுக்கு வேதப்பொருளை உபதேசம் செய்து, பின்னர் அம்பிகையுடன் மதுரை சேர்ந்ததாக மதுரைப்புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது.
- ஆதிசைவர்கள் வசமிருந்த இத்தலம் பின்னரே ராமநாதபுரம் ராஜாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதுமுதல் இன்றுவரை ராமநாதபுர சமஸ்தான ஆளுகைக்கு உட்பட்டதாக இருந்து வருகிறது இத்தலம்.



- உட்பிரகாரம் நுழையும் பொழுது அழகிய வேலைப்பாடுகளுடன் காணப்படும் யாழிகளில் இரண்டு யாளிகள் வாயில் கல்லால் ஆன பந்தை கொண்டுள்ளது. நாம் கையை நுழைத்துக்கூட பந்தை நகர்த்த முடியும்.
- இத்தலத்து கோவில் குளத்தில் வாழும் மீன்கள் நல்ல நீரில் வாழும் மீன்கள் இல்லை. கடல்நீரில் வாழும் மீன்களாகும்.
- பிரதோஷத்தன்று இங்கு தாழம்பூ வைத்து வழிபடுகின்றனர். இந்த கோவிலில் சிவனுக்கு அம்பாளுக்கு தாழம்பூ மாலை கட்டிப்போட்டால் அனைத்து தோஷங்களும் நீங்குவதாக ஐதீகம். இதனால் திருமணம் உடனே கைகூடும்.
- இங்கு ஆதிகாலத்து வராகி கோவில் உள்ளது இங்கு ஒவ்வொரு வெள்ளி,செவ்வாய்.ஞாயிறு தினங்களில் ராகுகாலத்தில் பூஜை தொடர்ந்து செய்தால் தீராத பிரச்னைகள், திருமணத்தடை போன்றவை விலகுகின்றன.
- டெல்லியை தலைநகராகக் கொண்டு 1300ம் ஆண்டு ஆட்சி செய்து வந்த அலாவுதீன் கில்ஜி, உத்தரகோச மங்கையில் மரகதகல் நடராஜர் சிலை இருப்பதை அறிந்து அதை





திரு உத்திரகோசமங்கை திருக்கோவில்
மகா கும்பாபிஷேக விழாவிற்கு வருகை தரும்
பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்

# RS மரக்கடை & பர்னிச்சர்ஸ்

எங்களிடம் தேக்கு, வேங்கை, கோங்கு மற்றும் நாட்டு வேம்பு மரங்களில் அனைத்து வகையான நிலைகளும், ஜன்னல்களும், ஜன்னல் கதவுகள் மற்றும் நிலை கதவுகளும் தரமான முறையில் செய்து தரப்படும். இவை அனைத்தும் காண்ட்ராக்ட் முறையில் பொருத்தி தரப்படும்.

மர சோபா செட்டுகள், மரக்கட்டில்கள், மர பீரோக்கள் மற்றும் இதர மரப்பர்னிச்சர்கள் அனைத்தும் தரமான மரங்களில் 50 வருட உத்திரவாதத்துடன் சிறப்பான முறையில் செய்து தரப்படும்





நிறுவனர் ஆர்.ரவிச்சந்திரன் ஆர்.பாலசுப்பிரமணியன் செல்:7010995148

அனுமார் கோவில் தெரு பரமக்குடி623707


## R.S.உரக்கடை

எங்களிடம் உரம், புண்ணாக்கு, விதைகள், பூச்சி மருந்து, தூசி, மாட்டுத்தீவனம்

இவை அனைத்தும் தரமான முறையில் நியாயமான விலையில் கிடைக்கும்







கொள்ளையடிக்க முயன்றான். மங்களநாதர் அருளால் அவன் முயற்சிக்கு வெற்றிகிடைக்கவில்லை.

* காகபுஜண்ட முனிவருக்கு கவுதம முனிவரால் ஏற்பட்ட சாபம் இத்தலத்தில்தான் நீங்கியது.
* சிவனடியார்கள் 60 ஆயிரம் பேர் இத்தலத்தில் தான் ஞான உபதேசம் பெற்றனர்.
* இத்தலத்தில் உள்ள மங்களநாதர் சன்னதி, மங்களேசுவரி சன்னதி, மரகதகல் நடராஜர் சன்னதி சகஸ்ரலிங்க சன்னதி நான்கும் தனிதனி கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், கொடி மரத்துடன் தனித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.
* நடராஜர் மரகத கல்லில் இருப்பதால் இத்தலத்தை சிலர் ரத்தின சபை என்கிறார்கள். பஞ்ச சபை திருத்தலங்கள் தோன்றுவதற்கு முன்பே இத்தலம் தோன்றியதால் இத்திருத்தலம் எந்த சபைக்கும் உட்படாதது என்றும், அதே நேரம் மற்ற சபைத் தலங்களைக் காட்டிலும் இத்தலம் ரத்தின சபை என்று உயரிய ஸ்தானத்தில் போற்றப்படுகிறது.
* காரைக்கால் அம்மையாரும் இத்தலத்துக்கு வந்து ஈசனை வழிபட்டு சென்றுள்ளார்.
* ஒவ்வொரு மாதமும் அமாவாசை, பவுர்ணமி, பிரதோஷம், கிருத்திகை, சதுர்த்தி நாட்களில் இத்தலத்தில் சிறப்பு பூஜைகள் நடத்தப்படுகின்றன.
* சித்திரை மாதம் திருக்கல்யாண வைபவம் வைகாசி மாதம் வசந்த உற்சவம், ஆனி மாதம் பதுநாள் சிவ உற்சவம், ஐப்பதி மாதம் அன்னாபிஷேகம், மார்கழி மாதம் திருவாதிரை விழா மாசி மாதம் சிவராத்திரி ஆகியவை இத்தலத்தில் நடைபெறும் முக்கிய விழாக்கள்ஆகும்.
* தினமும் இத்தலத்தில் காலை 5.30 மணிக்கு உஷத் காலம், 8 மணிக்கு கால சாந்தி, 10 மணிக்கு உச்சிக் காலம், மாலை 5 மணிக்கு சாயரட்சை, இரவு 7 மணிக்கு இரண்டாம் காலம், இரவு 8 மணிக்கு அர்த்தஜாம பூஜைகள் நடத்தப்படுகிறது.
* மங்களநாதருக்கு தினமும் காலை 6 மணிக்கு, மதியம் 12.30 மணிக்கு, மாலை 5.30 மணிக்கு அபிஷேகம் நடத்தப்படுகிறது.
* இத்தலத்தில் அதிகாலை 5 மணி முதல் மதியம் 1 மணி வரையும் பிற்பகல் 4 மணி முதல் இரவு 8 மணி வரையும் சாமி தரிசனம்செய்யலாம்.
* மரகத கல் நடராஜர் மீது சாத்தப்பட்டு எடுத்துத் தரப்படும்





aanmeegamalar.com



- இது அம்பிகைக்கு பிரணவப்பொருள் உபதேசித்த இடம்.
- தலவிருட்சமான இலந்தமரம் மிகமிகத் தொன்மையானதும் இன்று வரை உயிருடன் உள்ளதும் பல அருள் தலைமுறை களையும் முனிவர்கள் தரிசித்த தல விருட்சம் ஆகும். இந்த இலந்த மரம் 5000 ஆண்டுகளுக்கு முன்பு உள்ளது.
- வேதவியாசரும், பாராசரும் காகபுஜண்டரிஜி மிருகண்டு முனிவர்கள் பூஜித்த தலம்.
- உலகில் உள்ள 1087 சிவாலயங்களிலும் இருக்கும் அருட் சக்திகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் சகஸ்ரலிங்கம் இங்குள்ளது.
- ஆண்டுக்கு இரண்டு திருவிழா இங்கு நடத்தப்படுகிறது. ஒன்று சித்திரைத் திருவிழா, இன்னொன்று மார்கழித் திருவாதிரைத் திருவிழா
- இத்திருத்தலத்தில் ஒன்பது தீர்த்தங்கள் உள்ளது.
- சிவபெருமானால் பரத நாட்டிய கலையை உலக மக்களுக்கு முதல் முதலில் அறிமுகம் செய்யப்பட்ட திருத்தல மாகும்.
- ஈசன் ஈஸ்வரி பிறந்த ஊரான உத்திரகோச மங்கையில் ஒரு முறை பக்தர்கள் வந்து மிதித்தால் சொர்க்கம் செல்லுவது நிச்சயமாகும்.
- உத்தர கோசமங்கை திருத்தலமானது ஸ்ரீராமருக்கு ஈசன் சிவலிங்கம் வழங்கி சேது சமுத்திரத்தில் பாலம் போட உத்தரவு வழங்கிய இடமாகும்.
- இத்தலத்தில் மாணிக்கவாசகர் பாடிய பொன்னூஞ்சல் பாடலை குழந்தைகளை தாலாட்டும்போது பாடினால், குழந்தைகள் உயரமாகவும், உன்னத மாகவும் வாழ்வார்கள் என்பது பக்தர்கள் நம்பிக்கையாகும்.

சந்தனத்தை வெந்நீரில் கரைத்து குடித்தால் தீராத நோய்கள் கூட தீர்ந்துவிடும் என்பது நம்பிக்கை.

- இத்தலத்தில் மொத்தம் 11 விநாயகர்கள் உள்ளனர்.
- இத்தலத்தில் உள்ள ராஜகோபுரத்தில் சர்பேஸ்வரர் சிலை உள்ளது.
- நடராஜர் இங்கு அறையில் ஆடிய பின்னர்தான் சிதம்பரத் தில் அம்பலத்தில் ஆடினார்.


அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாக வாழவேண்டும்

S.ஆனந்தகிருஷ்ணன்&கோ

மரம், ஓடு வியாபாரம் & சாமில்

சீனியப்பா குரூப்ஸ்












எங்களிடம் ஒரிஜனல் (மர்மா), ஆஸ்திரிரேலியா வேங்கை, பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு, மருதமரம், நாவல்மரம், நல்ல கலர் உள்ள நாட்டு வாகை மரங்கள், குமிழ்மரம், ரோடு வாகைமரம், பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் மற்றும் மர பர்னிச்சர்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது. மொத்த மர வியாபாரிகள் அணுகவும்.

# உத்திரகோசமங்கை

# வராகியின் மகத்துவமும் தீராத நோய் தீர்க்கும் மஞ்சள் பிரசாதமும்



திருஉத்திரகோசமங்கை என்னும் திருத்தலம் மண் தோன்றியதோ மங்கை தோன்றியதோ என்னும் வாசகம் இதனை நமக்கு உணர்த்தும் அந்த சிவாலயம் மிகப்பழமை யான சிவாலயமாக இன்றளவும் இரண்டு இராஜ கோபுரங் களைக் கொண்டு விளங்கி வருகின்றது.

அந்த ஆலயத்தின் மிகப் பிரதான தெய்வமாக விளங்குபவர் ஆடல்வல்லான் ஸ்ரீ நடராஜ சுவாமி அவர் அவரது திருமேனி மரகதத்தால் ஆனது வருடத்திற்கு ஒருமுறை திருவாதிரை அன்று மட்டும் அபிஷேகம் காணும் அவர் மற்ற நாட்களில் எல்லாம் சந்தனத்தால் அதாவது சந்தனகாப்புடனேயே காட்சிதருவார்.

இத்தனை சிறப்புகளைக் கொண்ட அதே உத்திரகோசமங்கையில்தான் பஞ்சமி திதி தேவதையாக விளங்கும் ஸ்ரீ வாராகி அம் மன் சுயம்புவாக தோன்றி அருள் புரிந்து வரு கின்றார்.

அந்த ஆலயத்தின் மற்றொரு தெய்வம் ஸ்ரீ மங்கை மாகாளியம்மன் ஆவார்.

சுற்றுப்புற கிராமங்கள் வரண்டு இருந் தாலும் கூட இந்த ஆலயத்தின் எதிர்ப்புறம் இருக்கக் கூடிய மிகப்பெரிய குளமானது ஒரு காலத்திலும் வறண்டு போனது கிடை யாதாம்.

அந்த குளக்கரையின் மகுடமாக திகழ்கின்றது ஸ்ரீ சுயம்பு வாராகி அம்மன் திருத்தலம்.

அன்னையின் வடிவம் சுயம்புவாக உள்ளதால் பெரும் பாலான நாட்கள் அன்னை வெள்ளி கவசம் சாத்தப்பட்டு விளங்குகிறாள் விசேஷ காலங்களில் மஞ்சள் சந்தனம் காப்பு ஏற்றுக் கொள்கிறாள் அன்னை வாராகி.

மிகப்பெரிய வடிவமாக அமர்ந்த நிலையில் ஒரு காலை மடித்து மற்றொரு காலை பூமியில் ஊன்றியவாறு சுயம்பு திருமேனியாக விளங்கு கிறாள் வாராகி அம்மன்

வாராஹி அம்மன் ஆலயங்களில் தமிழ்நாட்டில் மிகப் பழமையான ஆலயங்களாக கருதப்படும்.



கீதா–ராஜன்

தஞ்சை வாராகி, அறச்சாலை அம்மன் என்று கூறப்படும் பள்ளூர் வாராகி, அகிலாண்டேஸ்வரி என்னும் வாராகி சக்தி, பின்னர் இந்த உத்திர கோசமங்கை வராகி மிக பிரபலமான இடத்தைப் பெறுகின்றனர்.

இந்த வராகி ஆலயத்தில் மஞ்சளுக்குத் தனிப்பட்ட விசேஷம் உள்ளது. மஞ்சள் வழிபாடு மிகப் பிரபலமாக விளங்குகின்றது.

தீராத நோய் உள்ளவர்கள் இந்த வராகி ஆலயத்திற்கு வந்து தங்களது நோய் தீரவேண் டும் என்ற வேண்டுதலை வைத்து, மஞ்சள் கிழங்கை அம்மியில் அரைத்து அம்பாளுக்கு காணிக்கையாக செலுத்து கின்றனர்.

அதுவும் இந்த ஆலயத்தின் எதிரே







இருக்கக்கூடிய வற்றாத குளத்தின் நீரைக் கொண்டுதான் மஞ்சளை அரைக்க வேண்டும்.

அந்த மஞ்சள் பிரசாதத்தை அம்பிகைக்கு சார்த்தி ஏற்கனவே அம்பிகைக்கு சார்த்தப்பட்ட மஞ்சள் பிரசாதத்தை ஏற்றுக் கொண்டு ஆலயத்திலேயே மருந்து உண்பதைப் போன்று உட்கொள்ள வேண்டும், அவ்வாறு மஞ்சள் பிரசாதத்தை உட்கொள்பவர்களின் தீராத நோய்கள் கூட எளிதாக நீங்கும் என்பது நம்பிக்கை.

பஞ்சமி மற்றும் ஆஷாட நவராத்திரி நவராத்திரி காலம் மற்றும் ஒவ்வொரு வெள்ளி செவ்வாய் ஞாயிறு ராகு காலம் ஆகிய காலங்களில் கோவிலில் கூட்டம் அலை மோதுகின்றது.

அதுமட்டுமின்றி வாராகி தனி கருவறையில் தனிக் கோவில் கொண்டு விளங்கு வது இத்தலத்தில் சிறப்பம்சமாக உள்ளது.

மேலும் ஆடி மாதம், அமா வாசை, பௌர்ணமி போன்றநாட்களில் பொங்கல் வைத்து வழிபாடும் நடைபெறுகிறது. மஞ்சள் அரைப்பதற்கு வசதியாக தரை மற்றும் திண்டு அமைத்து அதன் மேல் நிறைய அம்மி கற்கள் பதிக்கப்பட்டுள்ளது.

நோயால் அவதிப்படுபவர்கள் அவசியம் இந்த வராகியை சந்தித்து புனர்வாழ்வு வாழலாம்.



# பாம்பின் தலையில் இடக்கால் வைத்த நடராஜர்

தில்லையில் நடனமாடும் முன்பு இராமநாதபுரம் மாவட்டம் திருஉத்தரகோசமங்கை எனும் தலத்தில் நடராசர் தனிமையில் நடனமாடியதாகப் புராணங்கள் சொல்கின்றன. இத்தலத்தை ஆதி சிதம்பரம் என்றும், இத்தல இறைவன் ஆதிசிதம்பரேசுவரர் என்றும் அழைக்கின்றனர்.

இங்கு நடராஜர் திருமேனி பிரதிஷ்டை செய்யப்பட்ட மறுநாள் சிதம்பரத்தில் நடராஜர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

உலகிலுள்ள மற்ற சிவாலயங்களில் உள்ள நடராஜர் சிலைகள் அனைத்துமே இவ்விரண்டு மூலவர்களையும் பார்த்து தான் வடிவமைக்கப்பட்ட தாக கூறப்படுகிறது.

இவ்விரண்டு சிலைகளிலும் கழுத்திலும் இடுப்பிலும் பாம்பு கிடையாது. தலையில் கங்கை கிடையாது. புலித்தோல் உடையும் கிடையாது. இவ்விரண்டு சிலைகளுமே ராஜ தோற்றத்தில் உள்ளன.

பொதுவாக நடராஜர் சிலைகள் அனைத்துமே, வலது காலின் நுனியில் (மதுரை தவிர) முயலகக் குறும்பன் என்னும் அசுரனை நசுக்கிக்கொண்டு காட்சியளிப்பார்.

அதே சமயம் இடக்கால் அந்தரத்தில் தூக்கிய படி நிற்கும். ஆனால், உத்தரகோசமங்கை கோவிலில், நடராஜரின் இடது திருவடியானது பாம்பின் தலைமீது வைத்திருப்பது போல் உருவாக்கப் பட்டுள்ளது வெகு சிறப்பாகும்.

ஆண்டு முழுவதும் சந்தனக்காப்பு இந்த நடராஜர் சிலையை வெளியே கொண்டுவர முடியாது. இச்சிலையை உள்ளேயே வைத்து சந்நிதி கட்டப்பட்டுள்ளது.

ஆண்டு முழுவதும் அச்சிலையிலிருந்து அதிக அளவில் வெப்பம் வெளிப்படும் என்பதால், ஆண்டு முழுவதும் சந்தனம் பூசி குளிர்ச்சியாகவே வைத்திருப்பார்கள்.

இத்தல நடராஜர் சர்பம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளைத் தீர்க்கும் வல்லமை படைத்தவர் என்றும் அறியப்படுகிறது. சர்பம் சம்பந்தப் பிரச்சனை உள்ளவர்கள் இத்தலத்து நடராசனை தொடர்ந்து வணங்கினால் பலன் கிடைக்கும்.





உலகில் முதல் சிவாலயம் திருஉத்திரகேசமங்கை திருக்கோவில் மகாகும்பாபிஷேக விழாவினைக் காண வரும் அடியார் பெருமக்களையும் பக்த கோடி பெருமக்களையும் அன்புடன் அழைக்கிறோம்

சிவசக்தி மோட்டார்ஸ்
AUTHORISED REPRESENTIVE DEALER MP AKSHAYAA MOTORS SUZUKI



உங்கள் திருப்புவனம் சிவசக்தி SUZUKI-இன்
AUTHORISED REPRESENTIVE DEALER
MP AKSHAYAA MOTORS SUZUKI
13-B பாக்யாநகர், வேலம்மாள் மேல்நிலைப் பள்ளி எதிரில் திருப்புவனம்
98415 74874
8111074874

# ராமர், சீதைக்கு தோஷம் நீக்க உதவிய

# உத்தரகோச மணல்

இலங்கையில் நடந்த போரில் ராமன் ஏவிய பிரம்மாஸ்திரம் ராவணன் இருதயத்தை அது துளைத்தது.

ராவணன் தரையில் விழுந்து புரண்டு உயிர்துறந்தான்.

இதனால் ராமர், லட்சுமணன், சீதை ஆகியோர்களுக்கு பிரம்மஹத்தி தோஷமாகப் பற்றிக் கொண்டது. அதனால் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து குறித்த நேரத்துக்குள் ராமேஸ்வரத்தில் வழிபட வேண்டும் என்று மகரிஷிகள் அறிவுறுத்தினார்கள்.

லிங்கம் பிரதிஷ்டை செய்வதற்கு கைலாசத்தில் இருந்து லிங்கம் கொண்டு வரும்படி ராமன் அனுமனை அனுப்பி வைத்தார். ஆனால், நெடுந்தொலையில் உள்ள கைலாசத்திலிருந்து ஆஞ்சநேயர் லிங்கம் கொண்டு வருவதற்குக் காலதாமதம் ஆகிவிட்டது.

விபீஷணனின் வேண்டுகோளுக்கு இணங்கி மண்டோதரியின் குடிக்கோவிலான ஈசன், ஈஸ்வரி பிறந்த ஊரான உத்தரகோச மங்கை தலத்தில் மண் எடுத்து வந்து லிங்கத்தை பிரதிஷ்டை செய்து வழிபட்டால் பிரம்மஹத்தி தோஷம், உயிர்களின் ஆவி அனைத்தும் நீங்கும் என்று கூறிய அறிவுரையின்படி உத்தரகோச மங்கைக்கு வாலியின் மகன் அங்கதனை ராமர் அனுப்பினார். அங்கதன் அங்குள்ள மண்ணை எடுத்து வந்தான். சீதை சிவன் தலத்தில் உள்ள மண்ணை வைத்து லிங்கம் உருவாக்கி ராமேஸ்வரத்தில் பிரதிஷ்டை செய்து அனைவரும் வழிபட்டார்கள்.

இதன் மூலம் ராமேசுவரம் தலத்தில் உள்ள லிங்கம் உத்தரகோச மங்கையில் மண் எடுத்து செய்யப்பட்டது என்பது உறுதியாகிறது.


ஈசன், ஈஸ்வரி பிறந்த ஊரான உத்தரகோசமங்கை இருபத்தைந்தாவது கடைசி தீர்த்தமாகும். இந்த ஊர் ராமநாட்டில் இருந்து தெற்கு 15 கி.மீ. தொலைவில் உள்ளது.

ஒரு இந்து, காசி சென்று ராமேஸ்வரம் தீர்த்தமாடி இறுதியாக கடைசி தீர்த்தம் உத்தரகோசமங்கையில் தீர்த்தமாடினால் காசி யாத்திரை பூர்த்தியாகி சொர்க்கத்திற்குச் செல்வதற்கு வழிவகுக்கும் என்பது ஐதீகமாகும்.






# உத்தரகோச மங்களநாதர் அனுமதியுடன் இராவணனை அழிக்க புறப்பட்ட இராமன்



சீதையை தேடி ராமர், லட்சுமணன், வானரச்சேனையுடன் தொண்டிக்கு அருகில் வெயில் காத்த விநாயகர் கோவில் உப்பூர் சத்திரத்தில் தங்கியிருந்தனர். அந்த சமயத்தில் அனுமான் இலங்கையில் உள்ள அசோகவனத்தில் சீதையை ராவணன் சிறைபிடித்து வைத்திருந்ததை கண்ட செய்தியை ஸ்ரீராமருக்குத் தெரிவித்தான்.

அப்பொழுது சீதையை மீட்பதற்கு வேண்டி ஸ்ரீராமர் இந்த விநாயகரைப் பிராத்தனை செய்யும் பொழுது ஒரு அசரீரி தோன்றி "ஸ்ரீராமா! நீ உன் வானரச்சேனையுடன் நான், ஈசன், ஈஸ்வரி பிறந்த ஊரான உத்திரகோச மங்கை திருத்தலம் சென்று என்தாய், தந்தையர்களை பிரார்த்தனை செய். உனக்கு சீதையை மீட்பதற்கு வழிகாட்டுவார்கள் என்று அசிரீரி கூறி மறைந்தது.

உடனே ஸ்ரீராமர், லட்சுமணன் வானரச்சேனைகளுடன் உத்தரகோசமங்கை திருத்தலத்துக்கு வந்து சேர்ந்தார்கள். பின்னர் ஸ்ரீராமர், லட்சுமணன் புஷ்பகரணியில் நீராடி விட்டு ஈசன், ஈஸ்வரியை நோக்கி பிரார்த்தனை செய்தார்கள். சர்வேசுவரன் அவருடைய பூஜைக்கு மகிழ்ந்து அவர் முன்பு தோன்றினார்.

"ஸ்ரீராமா உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் நான் தருகிறேன்" என்றார். ஸ்ரீராமன் "பிரபோ, இந்த சேதுசமுத்திரத்தைக் கடந்து செல்லும் சக்தியை எங்களுக்கு அளிக்க வேண்டும். ராவணன் தங்கள் பக்தன், எனக்கு இழைத்த அபசாரத்துக்காக அவனைத் தண்டிக்க வந்துள்ளேன். என் விருப்பம் தடையேதுமின்றி நிறைவேற அனுக்கிரகம் செய்ய வேண்டும். இதுவே என்கோரிக்கை" என்று பிரார்த்தித்தார்.

"ஸ்ரீராமா! ராவணன் என்னுடைய பக்தனாக இருந்தாலும் முன்பு ஒரு சமயம் கைலயங்கிரி மலையைப் பெயர்த்து எடுத்து எனக்கு அபசாரம், செய்ததற்காக உன்னால் அழிக்கப்பட ஒரு "சாபம் கொடுத்துள்ளேன்" என்று கூறிய ஈசன் ஸ்ரீராமன் கோரிய வரங்கள் நிறைவேற ஆசி வழங்கினார். பிறகு ஈசனால் பூஜிக்கப்பட்ட சிவலிங்கத்தை ஸ்ரீராமன் கையில் கொடுத்து சேதுக்கரையில் சிவபூஜை செய்து சமுத்திரத்தில் ஐந்து நாள்களில் பாலம்போட்டு ராவணனை சிரைத்சேதம் செய்து சீதையை மீட்டுவருவாயாக என்று ஈசன், ஈஸ்வரி, ஸ்ரீராமன், லட்சுமணன் வானரப்படைகளை வாழ்த்தி அனுப்பினார்கள்.

கலியுகம் பிறந்து பஞ்சாங்கப்படி 5125 வருடங்கள் ஆகிறது. ஈசன், ஈஸ்வரி பிறந்த ஊரான உத்திரகோசமங்கையில் மேற்கண்ட சம்பவம் ராமாயண காலத்தில் நிகழ்ந்த ஒரு உண்மையான வரலாறாகும்.






புதிய கட்டிடப்பணிகள்
கட்டிட மராமத்து பணிகள்
கட்டிட ஆலோசனை
ஸ்ரீ பில்டர்ஸ்
சிறந்த அடித்தளத்தில் உங்கள் எதிர் காலத்தை கட்டியெழுப்புவோம்
Mobile: 9944941510, 9123530754, 9843224065
e-mail : krishnakamalrmd@gmail.com
Er.JB. கமலக்கண்ணன் Civil Engineer.,
57/5 MSK காம்ப்ளக்ஸ் சுவாமி விவேகானந்தர் சாலை
(காசுக்கடைபஜார்), இராமநாதபுரம்.

# கனவில் தோன்றிய ஈசன், கோவில் கட்டிய பக்தர்கள்

# வெளிப்பட்டினம் சிவன் கோவில் வரலாறு

வெளிப்பட்டணம் வித்தியாசமான பெயர் கொண்ட இத்தலத்தில் விளங்கிடும் ஈசன் மிகவும் விசேஷமானவர்....

இப்பகுதியில் வசித்த பக்தர்களால், பல நூற்றாண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட சிவாலயம்தான்,ரெத்னேசுவரர் உடனாய சௌபாக்ய நாயகி அம்பாள் திருக்கோயில், ஆரம்பத்தில் இப்பகுதியில் வாழ்ந்த மக்கள், தங்கள் வழிபாட்டுக்கென ஒரு கோயில் கட்ட வேண்டும் என்ற எண்ணம் கொண்டு, விநாயகர் ஆலயம் கட்ட தீர்மானித்தனர்.

அப்போது, செல்வந்தரான பக்தர் ஒருவர், சிவன் கோவில் கட்டி வழிபாடு செய்யுங்கள் என்று பரமேசுவரனே தன் கனவில் தோன்றி கூறியதாகவும், அதற்காக தனக்கு சொந்தமான நிலத்தைத் தருவதாகவும் சொன்னாராம்.

அதைத் தொடர்ந்து கோயில் திருப்பணிகள் துவங்கப்பட்டு காசியிலிருந்து சிவலிங்கம் தருவித்து ரத்னேசுவரர் என்று நாமம் சூட்டி, பிரதிஷ்டை செய்துள்ளனர்.

அம்பாள் திருவுருவச்சிலை செய்யப்பட்டதும், இங்கு வந்த ஆன்மிகப் பெரியவர் ஒருவரின் ஆலோசனைப்படி சௌபாக்ய நாயகி என்று திருப்பெயர் சூட்டினராம்.

பின்னர் தெப்பக்குளம் அமைத்து, கல் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தி வழிபட்டு வந்துள்ளனர். விநாயகருக்கும் அரச மரத்தடியில் தனிக் கோயிலுமாகவும் அமைத்தும் ஆகம விதிமுறைப்படியும் வாஸ்து முறைப்படியும் சிறந்த பிரார்த்தனை தலமாக இத்திருக்கோயில் வடிவமைக்கப்பட்டுள்ளது.







இத்தல இறைவனுக்கு சிவந்தீசுவரர் என்ற நாமமும், இறைவிக்கு சௌந்தர நாயகி என்ற மற்றுமொரு நாமமும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

சுவாமிக்கு வலப்புறம் கன்னிமூலையில் கணபதியும், மூலவர் கர்ப்ப கிருகத்தின் பின்புறமுள்ள லிங்கோத்பவரின் திருப்பார்வையில் சந்தான கோபாலகிருஷ்ணனும் அமர்ந்து அருள்பாலிக்கின்றனர்.

சுவாமி கோஷ்டத்தில் சாந்த சொருபமாக காட்சியளிக்கும் தட்சிணாமூர்த்தி பேரருளை வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு வியாழக்கிழமையன்றும் இங்கு கூடும் பக்தர்கள் வெள்ளமே இதற்கு சாட்சி. கன்னிப்பெண்கள் நல்ல கணவனை அடைய விஷ்ணு துர்க்கைக்கு நெய் விளக்கு ஏற்றி சுக்ரவார மங்கள பிரார்த்தனை செய்து பயனடைகிறார்கள்.

இத்தலத்தில் மற்றுமொரு சிறப்பம்சமாக ஐயப்ப சுவாமி சன்னதி அமைந்துள்ளது. சபரிமலையில் நடைபெறுவதைப் போன்றே தமிழ்மாதம் முதல் ஐந்து தேதிகளில் நடைதிறந்து சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. கார்த்திகை 1 தேதி முதல் தை மாதம் 6ம் தேதி வரை மண்டல மகரவிளக்கு பூஜைகள் வெகு விமரிசையாக நடைபெறுகிறது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் விரதமிருந்து இங்கிருந்து இருமுடி கட்டி சபரிமலைக்குச் செல்கின்றனர். சித்திரை முதல் நாள் விஷுக்கனி தரிசனமும் சிறப்புற நடைபெறுகிறது.

அம்பாள் சன்னதி கோஷ்டங்களில் அம்பிகையின் மூன்று வடிவங்களான இச்சா, கிரியா, ஞான சக்தியர் அருள்பாலிக்கின்றனர். மங்கல வராஹிஅம்மன், சனீஸ்வர பகவான், பக்த ஆஞ்சனேயர், கல்யாண முருகன், சூரியன், சந்திரன், நால்வர் சண்டிகேசுவரர் என அனைத்து மூர்த்திகளும் தனித்தனி சன்னதிகளிலும் அருள்பாலிக்கின்றனர். இங்குள்ள காலபைரவர் மிகுந்த கலையம்சத்துடனும் கண்ணைப் பறிக்கும் திருமேனியுடன் அருள்பாலிக்கின்றார். தேய்பிறை அஷ்டமிகளில் சிறப்பு ஆராதனைகள் இவருக்கு நடத்தப்படுகிறது. சுவாமி உள்மண்டபத்தில் தனிச்சன்னதியில் அருள்பாலிக்கும் தெற்கு நோக்கிய நடராஜர் மிகுந்த கலையம்சத்துடன் காணப்படுகின்றார்.

மேலும் இக்கோயிலின் மணி மகுடமாக ராமநாதபுரம் சீமையில் பெரிய நந்தியாக இத்தல சுதை நந்தி தெப்பக்குள மேடையில் அமர்ந்து அருள்பாலிக்கின்றார். இராமேஸ்வரத்துக்கு அடுத்தபடியாக இராமநாதபுரம் மாவட்டத்தில்

இரண்டாவது பெரிய நந்தி என்ற சிறப்பினை இத்தலத்து நந்தி பெற்றுள்ளது. இத்தலத்தில் 1884ல் தெப்பக்குளம்



மேடை அமைத்தல் என திருப் பணிகள் செய்தும் 1907ல் அன்றைய வழிபாட்டு முறைப்படி குடமுழுக்கு நடத்தியும் உள்ளனர். மூலவர்கள் மட்டும் இருந்த இக்கோவிலுக்கு பரிவார மூர்த்திகள் இல்லாதது குறையெனக் கருதி 1933ல் பரிவார மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளன. இந்திருக்கோயிலைப் பற்றி ரெத்தினேஸ்வரர் பதிகம், முகவை ரெத்தினேசர் பத்து ஆகிய பாடல்கள் நான்காம் தமிழ்ச்சங்க காலத்தில் எழுதப்பட்டுள்ளன.

பிற்காலத்தில் குன்றக்குடி அடிகளார் ராமநாதபுரம் வருகையில் போது இத்திருக்கோவிலுக்கு வந்து, சிறிய கோயிலாக இருந்தாலும் ஆகம முறைப்படி அமைந்துள்ள முழுமையான சிவன் கோயில் என்று பெருமையுடன் சொல்லி வழிபட்டுச் சென்றுள்ளார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் வைகாசியில் பிரம்மோற்சவமும், மார்கழியில் திருவெம்பாவை திருவிழாவும், சித்திரை முதல்நாள் பூச்சொரிதல் திருவிழாவும், புரட்டாசியில் நவராத்திரி விழா, ஐப்பசியில் பௌர்ணமி அன்று அன்னாபிஷேகம் ஆகியவையும் சிறப்புற நடைபெற்று வருகின்றன. இவை தவிர மாதந்தோறும் பிரதோஷம் பௌர்ணமி, அமாவாசை, கார்த்திகை மாத சோமவார சங்காபிஷேகம் என அனைத்து விழாக்களும் சீரும் சிறப்புமாக நடைபெற்றுவருகிறது.

தினமும் காலை 6 மணி முதல் மிமி மணிவரையும் மாலை 4 மணி முதல்இரவு 8 மணி வரையும் நடை திறந்து வைக்கப்பட்டு, இரண்டு கால பூஜைகள் காரண ஆகம முறைப்படி நடைபெற்று வருகின்றன.

தல மரமாக வில்வ மரம் உள்ளது. கோயிலுக்குள் தீர்த்தக்கிணறும் கோயிலுக்கு வெளியில் நந்தி மேடைக்குக் கீழே சௌபாக்ய தீர்த்தம் எனும் தெப்பக் குளமும் உள்ளன.

வெளிப்பட்டண வேந்தனான ரெத்தினேசுவரனை வழிபடுவோர் வாழ்வில் எல்லாவிதமான சகல சௌபாக்யங்களையும் பெற்று பெருவாழ்வு வாழ்வது திண்ணம்!

இராமேஸ்வரம் தல யாத்திரை வருபவர்கள் இராமநாதபுரத்தில் உள்ள இத்திருக்கோயிலையும் தரிசனம் செய்து வரலாம்.

இராமநாதபுரம் பேருந்து நிலையத்திலிருந்து 1கிமீ தொலைவில் வெளிப்பட்டணம் பகுதியின் நடுவே இத்திருக் கோயில் அமைந்துள்ளது.


திரு உத்திரகோசமங்கை மகா கும்பாபிஷேக விழாவிற்கு வருகை தரும் அன்பர்களை அன்புடன் அழைக்கிறோம்

அகிலா டிம்பர் டிரேடர்ஸ் ஸ்ரீ பெரியாண்டவர் மரக்கடை

M.S.P.A.உண்ணாமலை அம்மாள் திருமண மஹால்

A.T.T.லாட்ஜ் அகிலா காம்ப்ளக்ஸ்







அகிலா ஹார்டுவேர் & பிளைவுட் & பெயிண்ட்ஸ்

பைபாஸ்ரோடு, மானாமதுரை





L.சுரேஷ் S.அண்ணாமலை

மரம், ஓடு, வெளிநாட்டு மரவகைகள் மற்றும் அனைத்து வகை மரங்கள் சைஸ் தரமாக கிடைக்கும், வீடுகட்ட தேவையான கட்டுமான பொருட்கள் தரமானதாக நியாயமான விலையில் எங்களிடம் கிடைக்கும்

செல்: 98424 68215 / 73737 68215


aanmeegamalar.com

# கரகத்தில் வாசம் செய்யும்

# முத்தாலம்மன்

கோவில்களில் மூலஸ்தான மூர்த்திகள் முதலில் அமைக்கப் பட்டு, பின்னரே உற்சவ மூர்த்திகள் செய்விக்கப்படுவது வழக்கம். ஆனால் முதலில் உற்சவமூர்த்தியாக அம்பாளை எழுந்தருளச் செய்து விழா எடுத்துக் கொண்டாடிய பின்னர், மூலஸ்தான அம்பாள் திருவுருவச் சிலை செய்து அபிஷேக ஆராதனைகள் நடத்தி மகிழ்ந்துள்ளனர் இராமநாதபுரம் மக்கள். அக்கோவில், முத்தால பரமேஸ்வரி அம்பாள் திருக்கோவிலாகும். அதன் சிறப்புகளை இங்கே பார்க்கலாம்.

காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து வெளிப்பட்டணத்தில் குடிபுகுந்த மக்கள் முதலில் தங்கள் வழிபாட்டுக்கென ஒரு விநாயகர் ஆலயம் கட்டினர். அந்த கணபதிக்கு 'தர்ம தாவள விநாயகர்' என்று பெயர் வைத்து வழிபட்டு வந்தனர். அக்காலத்தில் இக்கோவிலுக்குள் குருகுலம் ஒன்றும் செயல்பட்டு வந்துள்ளது. அதில் பயின்ற மாணவர்கள் ஓய்வு நேரத்தில் விளையாட்டாக கரகம் எடுத்து ஆடுவதும், வேப்பிலையை வைத்துக் கொண்டு விளையாடுவதுமாக இருந்திருக்கிறார்கள்.

ஒரு நாள் இரவில் அவர்கள் கனவில் ஆதிபராசக்தி தோன்றி, "குழந்தைகளே! நீங்கள் ஆடிப்பாடி எடுத்தாடும் இந்த கரகத்தில் முத்தாலம்மன் என்ற பெயரோடு நான் எழுந்தருளியுள்ளேன். என்னை வழிபடுங்கள் உங்கள் குலத்தையும், ஊர் மக்களையும் காக்கும் தெய்வமாக இருந்து வருகிறேன்" என்று அசரீரியாக கூறினார்.

அதைத் தொடர்ந்து ஒரு சிவராத்திரி நன்னாளில் முத்தாலம்மன் குடி கொண்ட கரகத்தை எடுத்துச் சென்று தர்ம தாவள விநாயகர் கோவிலுக்கு முன்பு நிலை நிறுத்தி குலதெய்வமாக போற்றி வணங்கி வந்தனர்.

கும்பத்தின் மீதுள்ள மஞ்சனையாக அம்பாள் இருப்பதால், அம்பாளை ஓவியமாக வரைந்து அந்தப் படத்தை சிலகாலம் பூஜை செய்து வழிபட்டு வந்தனர். பின்னர் ஐம்பொன் உற்சவ விக்கிரகத்தை அமைத்து விழா எடுத்து கொண்டாடி வழிபட்டனர். அதன் பின்னரே முத்தாலம்மன் மூலவரை கற்சிலை வடியத்தில் உருவாக்கி பிரதிஷ்டை செய்து, மூலஸ்தான அம்பாள் பீடத்தில் ஸ்ரீ சக்கர பிரதிஷ்டையும் செய்து வழிபாடுகள் நடத்தி வந்துள்ளனர்.

இந்த அன்னையானவள் புன்னகை தவழும் மலர்ந்த முகத்துடனும், நான்கு திருக்கரங்களுடனும் சூலம், உடுக்கை, பாசம், கபாலம் ஏந்தியவளாக மாரியம்மனின் வடிவில் அமர்ந்துள்ளார். வேண்டுவோரின் வேண்டுதலை நிறைவேற்றும் வரப்பிரசாதியாகவும், மிகுந்த சக்தி மிக்கவளாகவும், பக்தர்களின் கண்கண்ட தெய்வமாகவும் அருள் புரிகின்றார். திருமண வரம், குழந்தை பாக்கியம் அமைந்திடவும், அம்மை நோய் உள்ளிட்ட அனைத்து



பிணிகளையும் போக்கும் அருள் தெய்வமாக முத்தாலம்மன் வீற்றிருக்கிறார்.

இந்த திருக்கோவிலில் பரிவார தெய்வங்களாக வள்ளி தெய்வானை சமேத கல்யாண முருகன், ருக்மணி சத்யபாமா சமேத கிருஷ்ண பரமாத்மா, ஆஞ்சநேயர், கருடாழ்வார், சக்கரத்தாழ்வார், யோக நரசிம்மர், விஸ்வக்சேனர், மகாலட்சுமி, நாகலிங்கேஸ்வார், நவக்கிரகம், ஷேத்திர பால கரான பைரவர் என அனைத்து தெய்வங்களும் அருள் பாலிக்கின்றனர்.

பிரதான தெய்வமான முத்தால பரமேஸ்வரி அம்பாளுக்கு வருடாந்திர பிரம்மோற்சவமாக மாசி மகா சிவராத்திரி பெரு விழா நூற்றாண்டுகளாக வெகு விமரிசையாக சீரும் சிறப்புமாக கொண்டாடப் பட்டு வருகிறது.அம்மனுக்கு உகந்த ஆடி மாதம் முளைக்கொட்டு திருவிழாவும், சித்திரை முதல் நாள் பூச்சொரிதல் திருவிழாவும். நவராத்திரி விழா, விநாயகர் சதுர்த்தி விழா, கந்த சஷ்டி விழா, கிருஷ்ண ஜெயந்தி விழா, மாதம் தோறும் பௌர்ணமி பூஜைகள், சதுர்த்தி, கார்த்திகை. அஷ்டமி பூஜைகளும் சீரும் சிறப்பு மாக நடைபெற்று வருகின்றன. இத்திருக்கோவிலின் தலவிருட்சமாக வேப்பமரம் உள்ளது. மழலை வரம் வேண்டுபவர்கள் இம்மரத்தில் தொட்டில் கட்டியும், கரும்பு தொட்டில் எடுத்தும் வேண்டுதலை நிறைவேற்றுகிறார்கள். காரண ஆகம முறைப்படி இத்திருக்கோவிலில் இரண்டு கால பூஜைகள் நடைபெற்று வருகின்றன. தினசரி காலை 6.30 மணி முதல் 11 மணி வரையும், மாலை 4.30 மணி முதல் இரவு 8 மணி வரையும் கோவில் நடை திறந்திருக்கும்.

அமைவிடம்:இராமநாதபுரம் பேருந்து நிலையத்தில் இருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் வெளிப்பட்டணம் பகுதியில் முத்தால பரமேஸ்வரி அம்பாள் திருக்கோவில் உள்ளது.

– பூ.பாலாஜி, ராமநாதபுரம்,

aanmeegamalar.com


திரு உத்திரகோசமங்கை திருக்கோவில் மகா
கும்பாபிஷேக விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை
அன்புடன் அழைக்கிறோம்
வாழ்க வளமுடன்
எங்களிடம் உங்கள்
வீட்டிற்கு தேவையான
பிரிட்ஜ், வாஷிங்மெஷின்,
மின்விசிறி உள்ளிட்ட பல்வேறு
மின்சாரப் பொருட்களும், திருமண
சீர்வரிசை, கட்டில், மெத்தை, தலையணை,
நவீன சேர்கள் இன்னும் பலவிதமான,
புதுவிதமான
பொருள்களும் ஒரே இடத்தில்
வாங்கி மகிழுங்கள்
Prop:
S.முனீஸ்வரி
சீர்வரிசை எலக்ட்ரிக் பர்னிச்சர்ஸ் வாங்க..
உங்கள் வாசுதேவன் ஹோம் அப்ளையன்ஸ்க்கு வாருங்கள்...
வாசுதேவன்
பர்னிச்சர்ஸ் & ஹோம் அப்ளையன்ஸ்
30/51, வள்ளல் பாண்டித்துறை வணிக வளாகம், அரண்மனை இராமநாதபுரம்
7598268209 / 8778458626

# சிவாகம் நூலை காப்பாற்றிய சிவவேதியர்

# மாணிக்கவாசகராக பிறவியெடுக்க வைத்த உத்தரகோசமங்கை சிவபெருமான்

உத்தரகோசமங்கை சிவபெருமானுக்கு ஆயிரம் சிவ வேதியர்கள் சிஷ்யர்களாக இருந்தனர். அவர்களிடம் சிவ பெருமான் மண்டோதரிக்கு அருள்புரிந்து வருகின்றேன் "சிவாகம நூலை" காத்துக்கொண்டு இருங்கள் என்று கூறி விட்டு இலங்கை சென்றார்.

சிவபெருமானிடம் 1000 சீடர்களும், ராவணன் அரக்கனால் உங்களுக்குத் துன்பம் உண்டானால் என்ன செய்வோம் என்றார்கள். அதற்கு சிவபெருமான், எனக்கு துன்பம் ஒன்றும் வராது. அப்படி அவனால் துன்பம் வந்தால் இந்த தெப்பக் குளத்தில் அக்கினி தோன்றும் என்று கூறி மறைந்தார்.

சிவபெருமான் அசோகவனத்தில் மண்டோதரிக்கு அருள் அளிப்பதற்கு வேண்டி சென்றபோது, இராவணன் ஈசனடியார் என்று உணராமல் சினமடைந்து அவரைப் பின்புறம் தலையில் அடித்து விடுகிறான்.

அதனால் தெப்பக்குளத்தில் அக்கினி தோன்றியது.

இது கண்ட ஆயிரம் வேதியர்களில் ஒருவர் நீங்கலாக எஞ்சிய 999 வேதியர்கள் ஈசனுக்கு ஆபத்து என்று அலறியவாறு அந்த அக்கினியில் இறங்கி விட்டனர்.

ஈசன் மண்டோதரிக்கு அருள் வழங்கி விட்டு உத்திர கோசமங்கை திரும்பி வந்தார்.

ஒரே ஒரு வேதியா மட்டும் சிவாகம நூலைக் கட்டி அணைத்து நிற்பதை கண்டார். அந்த சிவவேதியர் அக்கினி தெப்பக்குளத்தில் தீ எரிந்தது மற்ற வேதியர்கள் எல்லாம் அக்கினியில் இறங்கி விட்டார்கள் நான் ஆகமநூலை காப்பாற்றினேன் என்று ஈசனிடம் கூறினார்.

நீ ஆகம நூலை காப்பாற்றிய உம் பக்தியை மெச்சினோம். சிவாகம் நூலை தோத்திரப் பாக்களாகப் பாடி நம்மை மீண்டும் வந்து, மாணிக்கவாசகராக கி.பி.823 ஆம் ஆண்டு உத்திரகோசமங்கை திருத் தலத்தில் தோன்றி திருவாசகத்தை எழுதுவாய் என்று சிவபெருமான் கூறி மறைந்தார்.

அதன்படி மீண்டும் கி.பி.823ஆம் ஆண்டு உத்திரகோச மங்கை திருத்தலத்தில் மாணிக்கவாசகர் தோன்றி திருவாசகத்தை எழுதினார்.

மாணிக்க வாசகர் திருவாசகத்தில் நீத்தல் வண்ணம், திருப்பொன்னூஞ்சல் பாடியது மட்டுமல்லாமல், பல்வேறு இடங்களுக்கு சென்றாலும் அங்கும் உத்தர கோசமங்கை மன்னா என்றும் பாடியுள்ளார்.

இறைவனும், இறைவியும் பள்ளியறையில் அமர்ந்து பூஜை செய்யும்போது பள்ளியறை பாடல் திருஉத்தரகோசமங்கையில் பாடப் பெற்ற பாடலாகும். சிவாலயங்கள் அனைத்திலும் பள்ளியறை பூஜை சமயம் தினந்தோறும் பாடப்பட்டுவரும் "திருப் பொன்னூஞ்சல்" மாணிக்கவாசகரால் இவ்வாலயத்தில் வைத்து, இயற்றிப் பாடப்பெற்ற சிறப்பையும் பெற்றது.

மாணிக்கவாசகரால் பாடல் பெற்ற இத்தலம் அவரது திருவாசகத்தில் 38 இடங்களில் சிறப்புறப் புகழப் பட்டுள்ளது.

உத்தர கோசமங்கையைப் பற்றி திருவாதவூரார் நீத்தல் விண்ணப்பம் இருபது பாடல்களும், திருப்பொன்னூசல் பற்றி ஒன்பது பாடல்களும் பாட அவருடைய பாடல்களைக் கேட்டு இறைவனும் உருகிப் போனார்.




அப்பா நீ செந்தமிழால் என்னைத் தாலாட்டினாய், ஒவ்வொரு வார்த்தையும் முத்தென்பேன்... இல்லையில்லை மாணிக்க மென்று தான் சொல்ல வேண்டும். நீ மாணிக்க வாசகப்பா... மாணிக்கவாசகர் என்றார் சிவபெருமான்,

அன்று முதல் திருவாதவூராருக்கு மாணிக்கவாசகர் என்ற பெயர் ஏற்பட்டது. உத்திரகோசமங்கையில் இறைவனால் அவருக்கு பெயர் சூட்டப்பட்டஇடமாகும். மாணிக்கவாசகருக்கு மீண்டும் ஆசி யாரித்து இத்திருத்தலத்திலேயே திருவாசகத்தை எழுதும்படி உத்தரவிட்டு சிவவெருமான் மறைந்து விட்டார்.

மாணிக்கவாசகருடைய பாதயணி மரக்கட்டையினால் ஆன செருப்பு இலந்த மரத்தின் அடியில் இன்றும் காணலாம்.

# வாழ வழியின்றி தவிப்பவர்களுக்கு நல்வழிகாட்டும்

# வழிவிடும் முருகன்







இராமநாதபுரம் அருள்மிகு ஸ்ரீ வழிவிடுமுருகன் திருக்கோவில் சொத்துக்காக சண்டையிட்டு, கோர்ட் படியேறும் சகோதரர்கள் இங்குவந்து வழிபட்டால் சமாதானமாக போகவும், இருவரும் வாழவும் வழி பிறக்கிறது.

பொதுவாக கோயில்களில் நுழைந்தவுடன் இடதுபுறம் விநாயகரும், வலதுபுறம் முருகனும் இருப்பார்கள். விநாயகரை முதலில் வணங்கி விட்டு கோயிலுக்குள் சென்று திரும்பி வரும் போது முருகனை வணங்குவது போன்ற அமைப்பு இருக்கும். ஆனால், இங்கே கர்ப்பகிரகத்தில் முருகனும் விநாயகரும் சேர்ந்து அருள்பாலிப்பது மிக மிக சிறப்பு. இத்தகைய படைப்பை மிக அரிதாகவே காண இயலும்.

பாவம் போக்கும் சாயா மரம்: கோயிலின் உள்ளே 'சாயா' என அழைக்கப்படும் மரம் ஒன்று உள்ளது. சனிபகவானின் தாயார் பெயர் சாயா இந்த மரத்தை சாயாதேவியின் அம்சமாக இப்பகுதி மக்கள் பூஜை செய்கிறார்கள். எனவே இத்தலத்திற்கு வந்து வழிபடுவோரை தனது தாயின் சொல்லுக்கு கட்டுப்பட்டு, சனி பகவான் தங்களது துன்பங்களை குறைப்பதாக ஐதீகம். இந்த மரம் இலங்கையிலுள்ள கதிர்காமம் முருகன் கோயிலிலும் உள்ளது.

தல வரலாறு: தற்போது கோயில் உள்ள இடத்தில் பல ஆண்டுகளுக்கு முன் அரசமரம் இருந்தது. மரத்தின் கீழ் ஒரு சிறிய வேல் நடப்பட்டு அதற்கு பூஜை செய்யப்பட்டு வந்தது. அருகிலேயே கோர்ட் இருந்ததால் விசாரணைக்காக வருபவர்கள், வழக்குகளில் வெற்றி பெற வேண்டும் என வேண்டிச் செல்வார்கள்.

சொத்து வழக்குகளில் சிக்கி, வாழ வழியற்று நிற்பவர்கள், கிரிமினல் வழக்குகளில் சிக்கிய நிரபராதிகள் எல்லாம் இத்த முருகனை வணங்கி வாழ வழிபெற்றனர். எனவே வழிவிடும் முருகன் என்ற பெயர் இவருக்கு ஏற்பட்டது. இவரை வந்து வழிபட்டு செல்லும் பக்தர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் வாழ்க்கை முழுவதும் துணை வருவதாகவும் நம்பிக்கை உள்ளது.

அதிசயத்தின் அடிப்படையில்: இத்தலத்தில் கர்ப்பகிரகத்தில் முருகனும் விநாயகரும் சேர்ந்து அருள்பாலிப்பது மிக மிக சிறப்பு. இத்தகைய படைப்பை மிக அரிதாகவே காண இயலும் இத்தலத்தில் தான் சனீஸ்வரனின் தாய் சாயாதேவி மரம் வடிவில் அருள்பாலிக்கிறாள். இந்த மரத்துக்கும் சாயாமரம் என்ற பெயருண்டு.




மாதம் இரண்டு முறை வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தக(ம்)"த்தை aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்

184 க்கும் மேற்பட்ட இதழ்கள் உள்ளன


03.04.2025
சிறப்பிதழ்




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622 / 9994162182

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.


# சிவன் பிறப்பிடமாக கருதபடும் உத்தரகோசமங்கை மங்களநாதர் சுவாமி கோவில் கும்பாபிஷேகம்

ராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானம் ஆளுகைக்கு உட்பட்ட திரு உத்தர கோசமங்கை மங்களநாதர் சுவாமி கோயிலில் 16 ஆண்டுகளுக்கு பிறகு ஏப்., 4–இல் கும்பாபிஷகம் நடக்கிறது.



ராமநாதபுரத்திலிருந்து 18 கி.மீ.,ல் உள்ள உத்தர கோசமங்கை மங்களநாதர் சுவாமி சிவன் கோயில் பழமையும் புரதான சிறப்பும் பெற்றது. புராணம் மற்றும் இதிகாசத்துடன் நெருங் கிய தொடர்புள்ள இக்கோயில் ஆதி சிவன் கோயில் என அழைக்கப்படுகிறது.

2010–ல் ராஜகோபுரம் மற்றும் அம்மன் கோபுரங்கள் திருப்பணிகள் மேற் கொள்ளப்பட்டுமங்களநாதர் சுவாமி மற்றும் மங்களேஸ் வரி அம்மன் சன்னதியில் கும்பாபிஷேகம் நடந்தது. 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஏப்.,4 வெள்ளி இக்கோ யிலில் கும்பாபிஷேகம் நடக்க உள்ளது.

இதையொட்டி 7 ஆண்டுகளுக்கும் மேலாக திருப்பணிகள் தொடர்ந்து நடந்து வந்தன. மங்கள நாதர் சுவாமி, மங்களேஸ் வரி அம்மன், மரகத நடராஜர், திருக்கல்யாண மண் டபம், அர்த்தமண்டபம், பிரகார மண்டபம், மேற்கு கோபுர வாசல், சகஸ்ர லிங்கம், அக்னி தீர்த்த தெப்பக்குளம், பரிவார

சன்னதிகள் அமைந்துள்ள பகுதிகளில் புதிய வர்ணங் கள் பூசப்பட்டு பொலிவுடன் காட்சி தருகின்றன. கும்பாபிஷேகத்தை முன் னிட்டு சுவாமி, அம்மன் உள்ளிட்ட சன்னதிகளில் உள்ள கோபுர விமான கலசத்தில் 2010ல் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு அப்போதைய கலசத்தில்

உத்தரகோசமங்கை மங்களேஸ்வரி அம்மன் சன்னதி முன்புறம் உள்ள திருக்கல்யாண மண்டபம் கும்பாபிஷேகத்தையொட்டி புதுப்பொலிவு பெற்றுள்ளது.

நிரப்பப்பட்ட வரகு தானியம் புதுப் பொலிவுடன் இருந்ததை கண்டு பக்தர்கள் பரவசம் அடைந்தனர்.

மங்களநாதர் சன்னதி முன்புறமுள்ள ராஜகோபுரம் 120 அடி உயரமும், அம்மன் சன்னதி முன்புறம் உள்ள கோபுரம் 90 அடி உயரமும் கொண்டதாகும். ராஜகோபுரம் மற்றும் அனைத்து கோபுர கலசங்களிலும் புதிய வரகு நிரப்பப்பட்டு உள்ளது.



# சென்னையில் ஆன்மிக அன்பர்கள் நம்பிக்கை பெற்ற

# ஸ்ரீஜானகி டூர் டிராவல்ஸ்









இந்தியாவில் உள்ள புகழ் பெற்ற ஆன்மிக சுற்றுலா தலங்களுக்கு ஆன்மிக பக்தர்கள் மற்றும் மூத்த குடிமக்களை இறை அருளால் அழைத்து சென்று ஆன்மிக அன்பர்களின் நம்பிக்கை பெற்ற சுற்றுலா நிறுவனமாக ஸ்ரீ ஜானகி டூர்ஸ் நிறுவனம் உள்ளது.

ஆண்களுக்கு நிகராக அனைத்து துறைகளிலும் இன்று பெண்கள் சாதனை படைத்து வருகி அந்த வகையில் சுற்றுலா துறையில் சாதனை படைத்து வரும் ஸ்ரீ ஜானகி டூர்ஸ் டிராவல்ஸ் நிறுவனத்தினை சிறப்பான முறையில் நடத்தி வரும் நிர்வாக இயக்குனர்களில் ஸ்ரீபிரியா ரமேஷ் ஒருவர். சுற்றுலா தலங்களை தேர்ந்தெடுத்து முன்னேற்பாடாக வசதிகளை ஆய்வு செய்வது மற்றும் அலுவலகத்தை நிர்வகிப்பது சுற்றுலாக்களை வழி நடத்தி செல்வது என அனைத்து துறைகளிலும் இவரின் பங்கு முக்கியமாக உள்ளது.

ஆன்மீக சுற்றுலா என்றாலே ஸ்ரீ ஜானகி டூர் டிராவல்ஸ் என்ற பெயர்தான் நினைவுக்கு வரும். வாடிக்கையாளர்களின் அமோக ஆதரவை பெற்று சிறப்பாக சுற்றுலாக்களை நடத்தி வருகிறது ஸ்ரீ ஜானகி டூர் டிராவல்ஸ்.

அந்தமான் சுற்றுலா மற்றும் இந்திய அளவில் மிக முக்கியமான ஆன்மிக சுற்றுலா ஆலயங்கள். புண்ணிய ஸ்தலங்கள், தீர்த்த யாத்திரைகள், தவிர இந்த ஆண்டு வாடிக்கையாளர்களுக்கு புதிய அனுபவமாக அந்தமான் இன்ப சுற்றுலா அழைத்து சென்றுள்ளனர். அனைத்து வசதிகளுடன் அளித்து வாடிக்கையாளர்களின் ஏகோபித்த ஆதரவை பெற்றுள்ளது.

தற்போது ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, இத்தாலி, வாடிகன் சிட்டி உள்ளிட்ட நாடுகளுக்கு சுற்றுலா செல்ல சுற்றுலா பயணிகளுக்கு அழைப்பு விடுத்து உள்ளனர். இந்த சுற்றுலா பயணம் வருகிற ஏப்ரல் மாதம் 23ந் தேதி தொடங்குகிறது.

12 நாட்கள் இரவு மற்றும் 13 நாட்கள் பகல் என்ற திட்டமிடலுடன் செல்லும் இந்த சுற்றுலாவுக்கு ஒரு நபருக்கான கட்டணம் ரூ.3,77,900 என்று நிர்ணயித்துள்ளனர். சிறப்பான இடங்களை தேர்வு செய்து அனைத்து வசதிகளும் அளிப்பது. குறைந்த கட்டணத்தில் நிறைவான சேவை. முதியோர், குழந்தைகளுக்கு தனிப்பட்ட கவனம் இவைதான் எங்களது வெற்றிக்கு மூல காரணம். பெண்கள் தன்னம்பிக்கை யுடன் செயல்பட்டால் வெற்றி உறுதி. என்று ஸ்ரீஜானகி டூர் டிராவல்ஸ் இயக்குனர்கள் ரமேஷ், ஸ்ரீபிரியா ரமேஷ் ஆகியோர் தெரிவித்தனர்.

ஆன்மிக சுற்றுலா தொடர்புக்குர்புக்கு: 90942 79625


SREE JANAKI TOURS
DIVINE TOURS & SPECIAL TOURS ORGANISERS
DOMESTIC & INTERNATIONAL


SPECIAL COMFORT TOURS (TRAIN / BUS)
● KOLLUR, UDUPI TOUR ● KERALA TEMPLE TOUR
● SHIRIDI, MANTRALAYAM ● NAVAGRAHA TOUR
● KASI, GAYA, ALLAHABAD & PURI ● AHOBILAM & HILL STATION

ONE DAY TOUR (INCLUDING FOOD & A/C VAN)
● THIRUVANNAMALAI GIRIVALAM ● SRIPURAM GOLDEN TEMPLE
● SURUTAPALLI PRADASHOM ● SAKTHI TOUR
● THENNANGUR ● KANCHIPURAM & BALAJI DARSHAN

NEW 24, REDDY STREET, VIRUGAMBAKKAM, CHENNAI 600092 (OPP JAINS KENCES RETREAT)
PHONE: 9094279625 / 9444465924 e-mail: srijanaki.tours@gmail.com


ஆன்மிகமலர் .காம்


மக்களின் நன்மதிப்பை பெற்ற
ராமநாதபுரம் வழிவிடு முருகன் பங்குனி உத்திர திருவிழா, திருஉத்திரகோசமங்கை திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் காண வருகை தரும் பக்தர்களை அழைக்கிறோம்
செல்: 9025161717
ராம் சாய் ஹோட்டல்
(சைவம்)
எங்களிடம் திருமணம் மற்றும் சுப நிகழ்ச்சிகளுக்கு ஆர்டரின் பேரில் சைவ உணவுகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்.
G.H. ரோடு மற்றும் கேணிக்கரை, இராமநாதபுரம்.




aanmeegamalar.com

**அருள்மிகு தாயமங்கலம் முத்துமாரியம்மன்**
**பங்குனி பெருந்திருவிழாவை காணவரும்**
**பக்தர்களை அன்புடன் வரவேற்கிறோம்.**



இறை பணியில்

**பிராந்தமங்கலம்**
**தி.வெள்ளைச்சாமி தேவர் குடும்பத்தார்கள்**

**V.போஸ்** B.Com., D.Coop.,
SDCC BANK மேற்பார்வையாளர் திருப்புவனம்



# 'மதுரையின் அட்சய பாத்திரத்தோடு' இணைந்து, இல்லாதோருக்கு உணவு வழங்குங்கள்







அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. - திருக்குறள்

"பட்டினியாக இருப்போரின் பசியைத் தீர்ப்பதுதான், பிற்காலத்திற்கென சேமித்து வைக்கும் உண்மையான செல்வம்" என்கிறார் திருவள்ளுவர்.

நவரத்தினங்களில் உயர்ந்தது மாணிக்கம், உலோகங்களில் உயர்ந்தது தங்கம். இவற்றை தானமாகக் கொடுப்பது பற்றி நம் முன்னோர் சிலாகித்துச் சொல்லவில்லை. அன்னதானத்தை பற்றித்தான் அவ்வளவு பெருமையாகச் சொல்லி இருக்கிறார்கள்.

"மகாபாரதத்தில் கர்ணன், இறுதிக் காலத்தில் சொர்க்கம் சென்ற போது, அன்னதானம் நடந்த இடத்தை கைகாட்டிய விரலை வாயில் வைத்தபோதுதான் அவனது பசி அடங்கியதாம். அவன் செய்த மற்ற தானங்கள் எதுவும் அவனுக்குப் பயன் தரவில்லை.!"

ஆக, நம் முன்னோர்கள் ஒன்றும் சும்மா சொல்லிச் செல்லவில்லை, "தானங்களில் சிறந்தது அன்னதானம்" என்று.!


"குலதெய்வத்தின் அருள் கிடைக்கும், அடுத்த ஏழேழு தலைமுறைக்கும் நன்மைகள் கிடைத்து, சந்ததிகளும் பிள்ளைகளும் விருத்தி அடைவார்கள்!" என முன்னோர் சொல்லிச் சென்றது அன்னதானத்தின் மகிமையை எடுத்துக்காட்டுகிறது.

சம்பாதித்து தனக்கான உணவுத் தேவையைக் கூடப் பூர்த்தி செய்ய இயலாத, ஆதரவற்ற வறியோரும், முதியோரும் இன்னும் இந்த பூவுலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்யும் அற்புத வாய்ப்பை கருணையான இறைவன் நமக்கு அருளி இருக்கிறான்.

உங்களுக்கு 'தினமும் யாருக்கேனும் அன்னதானம் செய்யலாம்!' என்ற எண்ணம் இருக்கும். ஆனால், அதை எவ்வழியில் செய்வது? எனத் தெரியாமல் இருக்கலாம். வேலைப்பளு காரணமாகவும் அதனைச் செய்ய இயலாத சூழல் வரலாம்.

இப்பணியை கடந்த 3 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாகச் செய்து வரும், 'மதுரையின் அட்சய பாத்திரத்தோடு' இணைந்து, இல்லாதோருக்கு உணவு வழங்குங்கள்.

aanmeegamalar.com








உணவு சமைத்து, அதனை டப்பாக்களில் அடைத்து, அவர்களது இருப்பிடம் கொண்டு சேர்க்கும் வரை.. ஒரு நாளுக்கு ஒருவருக்கு மதிய உணவுக்கான செலவு ரூபாய் 40 ஆகிறது.

கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக, கருணை உள்ளம் கொண்ட கொடையாளர்களின் உதவியோடு மட்டுமே இது சாத்தியமாகி வருகிறது! அதே சமயம் ஒவ்வொரு மாதமும் கொடையாளர்களைத் தேடிப் பிடிப்பதும் சற்று சிரமமாக இருக்கிறது.

எனவே, '365 நாளுக்கும் ஒரு நற்கொடையாளர்' என்ற வீதத்தில் உங்களின் உதவியை எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம்.! இதில், பங்கேற்று தினமும் ஒருவருக்கு ஆகும் செலவான, ரூ.40 வீதம் ஆண்டுக்கு ரூ.14,600 என கொடுத்து பங்கேற்கலாம். அன்றாடம் எவ்வளவோ செலவு செய்கிறோம் ஒரு ஆண்டை கணக்கிட்டால் இது பெரிய தொகையும் அல்ல.!

அரிய வாய்ப்பு இது.! நமக்கு உதவலாம் என்ற எண்ணம் இருந்தாலும் அதை செயல்படுத்துவதில், நடைமுறை சிக்கல்கள் நிறையவே இருக்கும். எங்களோடு இணைந்து தினமும் ஒருவரின் வயிற்றுப் பசியை ஆற்றும் அறப்பணியைக் கைகோர்த்து செய்திட அன்புடன் வேண்டுகிறோம்.!

மேற்கண்டபடி தர இயலாவிட்டால் தாங்கள் விரும்பியபடி எவ்வாறேனும், தங்கள் வசதிக்கு ஏற்பவும் உதவலாம்!

இந்த நல்ல அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, தயவு செய்து அன்னதானம் செய்து தங்களது சந்ததிகளை விருத்தி பெற செய்வதோடு, முன்னோர் பாவங்கள் ஏதேனும் இருந்தாலும் நிவர்த்தி பெற்று புண்ணியத்தை தேடி கொள்ளுங்கள்.

அன்னதானம் செய்யக்கூடிய வாய்ப்பு எல்லோருக்கும் எளிதாக கிடைத்துவிடாது! கிடைக்கும் இந்த அரிய வாய்ப்பினையும் இறைவன் கொடுத்த நல்வாய்ப்பாகக் கருதி, பயன்படுத்திக் கொள்ளுங்கள் என அன்போடு வேண்டுகிறோம்.!

மக்கள் பணியில்..

Rtn.நெல்லை பாலு, நிறுவனர் அனுஷத்தின் அனுக்கிரகம், மதுரையின் அட்சய பாத்திரம் ட்ரஸ்ட் G-102, சாந்தி சதன் குடியிருப்பு, கோச்சடை, மதுரை 625016 Ct: +91 94426 30815 GPay & Phonepay: +91 9442630815






கீதாசமையல்

# gsspecialfood

ஆன்லைன் இயற்கை உணவுப்பொருள் அங்காடி




**சத்துமாவு**
41வகை தானியங்களில்
தயாரிக்கப்பட்டது
250 கிராம் ரூ.180




**நலங்கு மாவு**
35 வகை மூலிகைகளில்
தயாரிக்கப்பட்டது (பெண்கள் மட்டும்)
200 கிராம் ரூ.200




**கருப்பு உளுந்து**
**கஞ்சிமாவு**
250 கிராம் ரூ.140




வல்லாரை கீரை இட்லிபொடி
100 கிராம் ரூ.70

கறிவேப்பிலை இட்லிபொடி
100 கிராம் ரூ.50

தூதுவளை கீரை இட்லிபொடி
100 கிராம் ரூ.70

கொள்ளு இட்லிபொடி
100 கிராம் ரூ.50

முடக்கத்தான் கீரை இட்லிபொடி
100 கிராம் ரூ.70

மேற்கண்ட பொருட்கள் தேவைப்படுபவர்கள்
கீழ்காணும் வாட்சப் எண்ணில் மெசேஜ்
செய்து பெற்றுக்கொள்ளவும்

**7550199561**

தரமாக, சுத்தமாக, கலப்படமின்றி
தயாரிக்கப்பட்டது. எந்தவித இரசாயண
கலவையும் பயன்படுத்தாமல்
தயாரிக்கப்பட்டது
(பூண்டு சேர்க்காமல் தயாரிக்கப்பட்டது)

# ஆன்மிகமலர்.காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

சார்பில்

## 2025 சித்திரை மாத சிறப்பிதழ் தயாராகிறது



மதுரையைச் சுற்றியுள்ள கோவில்கள்

மதுரை மீனாட்சியின் வெளிவராத அற்புதங்கள்

ஆறுபடை வீட்டில் திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை ஆகிய இரண்டு படைவீடு கொண்ட மதுரை

எண்ணற்ற மதுரை கோவில்களின் சிறப்புகள்

**விரைவில்...**

உங்கள் கைகளில்



உங்கள் நிறுவன விளம்பரங்கள் குறைந்த செலவில் தரமாக வெளிவர எங்களை தொடர்பு கொள்ளவும்...

ஆன்மிக அன்பர்கள் இதழ் குறித்த தகவலை பெற தொடர்பு கொள்ளவும்

மேலும் தகவல்களுக்கு:

**Ph:9994323622** W.No:9444228203




# அருள்மிகு ஸ்ரீ முத்தால பரமேஸ்வரி அம்மன்

## பங்குனித் திருவிழா

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் உள்ள தென் பாண்டி நாட்டில் திலகம் போல் விளங்குவதும் புண்ணிய நதியாம் வைகை ஆற்றில் வளமிக்க திருநாவுக்கரசர் சுவாமிகள் பாடல் பெற்ற பெருமையும் கொண்டு அருள்மிகு ஸ்ரீ சிருங்கேரி சுவாமிகள், அருள்மிகு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள், தமிழகத்தில் பெருமை மிக்க மடாதிபதிகள், சமயாச் சாரியார்கள் ஆகியோர்களால் வழிபாடு செய்து பெருமை பெற்ற தென்பரம் பையம்பதியாம் பரமக்குடியில் எழுந் தருளி அருள்பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ முத்தால பரமேஸ்வரி அம்மன் திருக்கோவில் கும்பாபிஷேக திருப்பணிகள் ஆயிரவைசியர்களால் முழுமையாக நிறைவு செய்யப்பட்டு, கடந்த மாதம் பிப்ரவரி 10-ந்தேதி திங்கட்கிழமை காலை நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தைமுன்னிட்டு ராஜ கோபுரம், கொடிமரம் விமான கோபுரம் மற்றும் ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ முத்தால பரமேஸ்வரி, ஸ்ரீ திரெளபதி, ஸ்ரீ மார்த்தாண்டி, ஸ்ரீ போத்திராஜா , ஸ்ரீ கருப்பர், அருள்மிகு ஸ்ரீ மாருதி, ஸ்ரீ பைரவர் உள்ளிட்ட பரிவார சன்னதிகள்


புதுப்பிக்கப்பட்டு கலைநயத்துடன் வர்ண வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

புதிதாக வெள்ளி ரதம் மற்றும் அம்பாள் எழுந்தருளும் வாகனங்களும் புதுபிக்கப்பட்டுள்ளது.

பங்குனிப் பெருந்திருவிழா வரும்







ஏப்ரல் 2ம் தேதி புதன்கிழமை தொடங்குகிறது. அதைத் தொடர்ந்து திருவிழா ஏப்ரல் 14ம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதில் முக்கியத் திருவிழாவாக தேரோட்டம் ஏப்ரல் 11ம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அதிகாலை புஷ்ப பல்லக்கில் அருள்மிகு ஸ்ரீ முத்தால பரமேஸ்வரி அம்மன் வைகை ஆற்றில் எழுந்தருளும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. ஏப்ரல் 13ம் தேதி பாலபிஷேக நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்த திருவிழாவில் பரமக்குடி சுற்றுவட்டாரத்தில் உள்ள ஆயிரக்கணக்கான பக்தர்கள் தீச்சட்டி, பால்குடம் பூ கரகம் எடுத்து வந்து வழிபாடு செய்வார்கள்


ஸ்ரீ திருமலை தண்டபாணி டிரேடர்ஸ்

HOME UPS, BATTERY




Ph:9688991757

செல்வ கணபதி (CCTV) சிஸ்டம்




PH:9952569372

பரமக்குடி (காந்தி சிலை அருகில்)

OUR SALES AND SERVICES AVAILABLE IN

மதுரை-இராமநாதபுரம்-இளையான்குடி

# கேட்டவரம் தரும் கரிசல்குளம்

# முத்துமாரி அம்மன் கோவில்



சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் இருந்து மதுரைராமேசுவரம் பைபாஸ் சாலையில் அன்னவாசல் விலக்கு என்ற இடத்தில் இருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது எஸ்.கரிசல்குளம் கிராமம். இங்கு மனைவி ராக்குவுடன் வசிப்பவர் 90 வயதான லட்சுமணன் சுவாமி. இவரது இளம் வயதில் கனவில் வந்து அம்மன் அருள் கூறியதை இக்கிராம மக்கள் முக்கியமானதாக எண்ணுகின்றனர்.

சிறு வயது முதலே பராசக்தி தாய்க்கு சிறு பூஜைகளை செய்து வந்தார் லட்சுமணன் சுவாமி. பலமுறை கனவில் வந்த பராசக்தி ஊர் எல்லையில் உள்ள ஓர் இடத்தில் கல் கிடைக்கும். அதை எடுத்து வைத்து எனக்கு கோவில் கட்ட வேண்டும் என கூறி மறைந்தாள்.

அதன் பின் அருகே உள்ள வேறு ஊருக்கு சென்று குறி பார்த்தபோது கனவில் முத்துமாரியாக கல் தோன்றி உள்ளது. உடன் கனவில் கூறிய இடத்தை பார்வை யிடும்படி குறி பார்த்த இடத்தில் கூறி உள்ளார்கள்.

கனவில் அம்மன் சொன்ன இடம் வேறொருவரின் நிலமாக இருந்தது. மிகுந்த தயக்கத்துடன் நில உரிமையாளரிடம் பேசினார். அவரும் எந்தவித தயக்கமின்றி இடத்தை தோண்டி பார்க்க சொன்னபோது ஆச்சரியம் நடந்தது. கனவில் கூறியது போல் கருங்கல் கிடைத்தது. அதை தொடர்ந்து கனவில் கல்லாக தோன்றியது முத்துமாரி தான் என நம்பிய லட்சுமணன், அதை அங்கேயே பிரதிஷ்டை செய்து சிறு பூஜைகளை நடத்தி வந்தார். பிரதி ஷ்டை செய்த மறுநாளே பல ஆண்டு காலமாக இருந்த தழும்புகள் பூரண குணமடைந்து குணம் பெற்றார் லட்சுமணன் சுவாமி.

அன்று முதல் பல ஆண்டு காலமாக கருங்கல்லாக கிடைத்த அம்மனை முத்துமாரியாக பொதுமக்கள் வணங்கி வருகின்றனர். கனவில் அம்மன் தோன்றி குணமடைந்ததை அறிந்த ஏராளமானோர் கரிசல்குளம் கிராமம் வந்து முத்துமாரியம்மனை வழிபட தொடங் கினார்கள். அன்று முதல் லெட்சுமணன்' சுவாமி மனைவி ராக்குவுடன் கோவிலில் தங்கி அம்மனுக்கு பூஜைகளை நடத்தி வருகிறார். குழந்தை பாக்கியம், தீராப்பகை பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கும் அம்மன் நினைத்த காரியங்களை உடனுக்குடன் நிறைவேற்றித் தருவதாக நம்பப்படுகிறது.

2011ம் ஆண்டில் முத்துமாரியம்மனுக்கு அழகிய சிலை வடித்து சுயம்புவாக வந்த கருங்கல் அருகேயே பிரதி ஷ்டை செய்யப்பட்டு உள்ளது. தற்போது கும்பாபிஷேகம் திருப்பணிகள் தொடங்கப்பட்டு வரும்




வைகாசி மாதம் மகாகும்பாபிஷேகம் நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது . பங்குனி பொங்கல் விழா, ஏப்ரல் 4,5 ல் நடைபெறுகிறது. ஆடிமாதம் முளைப்பாரி, தீச்சட்டி ஊர்வலம் பிரசித்தி பெற்ற திருவிழாவாக நடத்தப்படுகிறது. கருங்கல்லாக அம்மன் கரிசல்குளம் கிராமத்தில் எழுந்தருளியதால் இன்றும் ஏராளமானோர் வழிபட்டுச் செல்கின் றனர். 2025ம் ஜனவரி மாதம் லெட்சுமணன் சுவாமிகள் சமாதி நிலை அடைந்தார் அவரது ஜீவ சமாதியில் பக்தர்கள் வழிபாடு நடத்தி வருகின்றனர்.

ஆலய தொடர்புக்கு 9942345781

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கேட்டவரம் தரும்

S.கரிசல்குளம் அருள்மிகு

# ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்

## 47ம் ஆண்டு பங்குனி பெருந்திருவிழா

**ஏப்ரல் 6.4.2025 ஞாயிற்றுக்கிழமை**

**தீசட்டி எடுத்தல், பூக்கரகம், அன்னதானம்**

பக்தகோடிகள் குடும்பத்தாருடன் வருகைதந்து அம்மனின் அருள் பெற வேண்டுகிறோம்



### கேட்டவரம் தரும் அம்மனின் அற்புதங்கள்

* நீண்டநாள் குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைத்துள்ளது.
* கணவன், மனைவி நீண்டநாள் பிரிந்து வாழ்ந்தவர்கள் அம்மன் அற்புதத்தால் சேர்ந்து வாழ்கின்ற பாக்கியம் கிடைத்துள்ளது.
* கடன் பிரச்சினை தீர்த்து அருளாட்சி தருகிறது.
* திருமண தடைகள் நீங்கி திருமணம் நடைபெற்றுள்ளது.
* தொழில் வளர்ச்சியை கொடுத்து அற்புதம் நிகழ்த்தியுள்ளது.
* ஊமை பேசிய அதிசயம் நிகழ்ந்துள்ளது.
* பசுவின் மடுவில் உதிரமாக வந்ததை பாலாக மாற்றி அதிசயம் நிகழ்ந்துள்ளது.
* தீராத நோய்களை அம்மன் அற்புதத்தால் நீக்கியுள்ளது. கேட்டவரத்தை அம்மன் கனவில் சென்று அற்புதம் நிகழ்த்திய காட்சி.

**பக்தர்களின் வேண்டுதல் நிறைவேறி உள்ளது.**

**நித்திய பூஜை, தேர் திருப்பணி, அன்னதான நன்கொடை அனுப்பலாம்**

SRI MUTHUMARI AMMAN TEMPLE TRUST
Ac/No.6823586631
IFSC code: IDIB000M266
Indian Bank, Manamadurai

பக்தகோடிகளும், வியாபார பெருமக்களும் குடும்பத்தாருடன் வருகை தந்து அம்மனிடம் வேண்டும் வரத்தை பெற்று சுபிட்சமாக வாழ வேண்டுகிறோம்.

பஸ் ரூட் : மானாமதுரை பஸ் நிலையத்திலிருந்து 7 கி.மீ. மாதா காலேஜ் வழி அன்னவாசல் புதூர் அருகில்
நேரம் காலை 9.00 மணி, மதியம் 12.00 மணி, மாலை 4.00 மணி, இரவு 7.00 மணி.



பெ.ராக்கு லெட்சுமண சுவாமிகள்
பரம்பரை டிரஸ்டி

: என்றும் இறைபணியில் :

## செர்டு சமூக சேவை நிறுவனம்

மானாமதுரை. Cell: 9942345781

aanmeegamalar.com

# பங்குனி உத்திரமும்... குலதெய்வ வழிபாடும்...





குலம் தெரியாமல் போனாலும், குலதெய்வம் தெரியாமல் போகக்கூடாது. குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறக்கக்கூடாது என்பது பழமொழிகள்.

பங்குனி உத்திரம் இந்துக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றைய தினம் குலதெய்வத்தை வழிபட்டால் இரட்டிப்பு பலன் கிடைக்கும்.

குலதெய்வ கோவில்களான காவல் தெய்வங்கள் என அழைக்கப்படும் சாஸ்தா, அய்யனார் கோவில்களுக்கு பங்குனி உத்திரத்தன்று சென்று வழிபடுவதை மக்கள் வழக்கமாக கொண்டுள்ளனர்.

இந்த குலதெய்வ வழிபாட்டை கார்த்திகை மாதம் திருகார்த்திகையின் போதும், பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தன்றும் வழிபடுவார்கள்.

இதில் பங்குனி மாதம் உத்திரம் நட்சத்திரத்தன்று குலதெய்வ வழிபாடு செய்வது மிகவும் சிறப்புக்குரியதாகும். அன்று பௌர்ணமி என்பதால் உகந்த நாளாகவும் அமைகிறது.

மற்ற நாட்களில் குலதெய்வத்தை வழிபடுவதை விட பங்குனி உத்திரம் அன்று வழிபடுவது தான் நல்ல பலனை பெற்றுத் தரும்.

குலதெய்வ கோவிலில் நல்லெண்ணெய் தீபமிட்டு வழிபட்டால் கோடி நன்மை தரும்.

பங்குனி மாத பௌர்ணமியில் குடும்பத்துடன் சென்று குலதெய்வத்தை தரிசித்து வாருங்கள். வழக்கமாக உங்கள் முன்னோர்களால் செய்யப்படும் பூஜைகள், அபிஷேகங்கள் செய்து பொங்கல் இட்டு குடும்பத்தோடு ஒற்றுமையாக வழிபட்டால் புண்ணிய பலன்களோடு முன்னோர்களது ஆசியும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

வழிபாடு முடிந்ததும் அங்கேயே சமைத்து பந்திப் போட்டு பரிமாறி வீடு திரும்புவதும், குலதெய்வத்தைத் திருப்திப்படுத்தும்.

பங்குனி உத்திரத்தன்று வெளியூரிலும், வெளிநாடுகளிலும் வசிப்பவர்கள் தவிர்க்க இயலாத காரணத்தினால் குலதெய்வ கோவிலுக்கு செல்ல முடியவில்லையென்றால் வீட்டின் பூஜையறையில் இருக்கும் குலதெய்வத்துக்கு படையல் இட்டு மனம் உருகி வழிபாடு செய்யலாம்.

குலம் சிறக்கவும், குடும்பம் மேன்மை பெறவும் குலதெய்வத்தை மகிழ்விக்க பங்குனி உத்திர நாளே நல்ல நாள்... ஒருவரது குலத்தை வழி வழியாக பாதுகாக்கும் வலிமையும், சக்தியும் குலதெய்வத்துக்கே உண்டு.

பங்குனி உத்திரத்தன்று குடும்பத்துடன் சென்று குலதெய்வத்தை பூஜை செய்து வழிபடுங்கள்... இரட்டிப்பு பலன்களைப் பெற்று வளமாக வாழ்வீர்கள்...


சத்துமாவு
41 வகையான சிறுதானியங்களில் தரமான முறையில் தயாரிக்கப்பட்டது
குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்குமான இயற்கை உணவு, எந்தவித கலப்பட இரசாயன கலப்படமும் இல்லை ஆரோக்கியத்தை காக்கும் உணவு.
பாரிம்பரிய முறையில் சிறுதானிய வகைகளைக் கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளது.



கீதாசமையல்
SPECIAL FOOD
fssai REGISTRATION 22424543000080
7550199561
geethasamayalspacialfood@gmail.com
home made products

# தினமும் இரவில் சலங்கை கட்டி நடந்து வரும் ஆவணி அம்மன்






மதுரை கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் சங்கரன் கோவில் அருகே புளியங்குடி நகரத்தில் வீற்றிருக்கும் சக்தி வாய்ந்த அம்மன் ஆவணி அம்மன். ஊர் மக்களை காவல் காப்பதற்கு ஊரில் எல்லையில் காவலாக வீற்றிருக்கும் அம்மன் ஆவணி அம்மன்.

பெயர் காரணம் ஆவணி அம்மன். ஆவணி என்றால் உலகம். உலகத்தைக் காக்கும் அம்மன் ஆவணியம்மன் மருவி ஆவணி அம்மனாக மாறிவிட்டது. மற்றொரு அர்த்தம் ஆ என்றால் பசு. அணி என்றால் வரிசை குளத்தில் அருகில் உள்ள புற்களை மேற்வதற்காக பசுக்களை அங்கே விடுவதுண்டு.

ஒரு நாள் பசுக்கள் அனைத்தும் ஒரு இடத்தில் வரிசையாக நின்று பாலைச் சொரிந்து கொண்டு நின்றன. மாடு மேய்ப்பவன் அங்கு சென்று பார்க்கும் போது அங்கே ஒரு அம்மன் சிலை இருப்பதைக் கண்டான். மக்களிடம் இந்த விஷயத்தைக் கொண்டு சென்றான். அனைவரும் வந்து ஆச்சரியத்துடன் பார்த்தனர். அடுத்து ஒருவர் மீது அம்மன் வந்து இறங்கி இங்கு எனக்கு கோவில் கட்ட வேண்டும் என்றார்.

கட்டுமானப் பணிகள் கடகடவென்று நடைபெற்று அம்மன் அனுக்கிரகத்தால் பல நூற்றாண்டுகளைத் தாண்டி இருக்கின்றது. இக்கோவிலும் அம்மனும் பெருமை மிக்கவர்கள். அம்மனை நினைத்தாலே நிம்மதி கிடைக்கும் அம்மன் கோவிலில் சென்று அமர்ந்தாலே ஒரு அமைதி நம்மை ஆட்கொள்ளும். கம்பீரமாக வீற்றிருக்கும் அம்மனின் திருவிளையாடல்கள் ஏராளம். தினமும் இரவில் சலங்கை கட்டி நடந்து வருவாள்.

நோய், நொடிகள் பசிப்பிணிகள் இவற்றை விலக்குவாள். ஒவ்வொரு வருடமும் ஆடிப் பூரம் அன்று அம்மனுக்கு வளைகாப்பு நடைபெறும், சித்திரை மாதம் பௌர்ணமி அன்று திருவிழா நடைபெறும் மக்கள் தங்களை காக்கும் அம்மனுக்கு கூழ் ஊற்றுதல், பொங்கல் வைத்தல், மாவிளக்கு ஏற்றுதல் என்று தம்மால் முடிந்தவற்றைச் செய்வர் மேலும், புளியங்குடியில் உள்ள மூன்று கோவில்கள் மன்னர்களால் கட்டப்பட்டது. ஆவணி அம்மன் கோவில், காவல் நிலையம் அருகில் உள்ள செல்லியம்மன் கோவில், திருமலைநாயக்கன் புதுக்குடியில் இருக்கும் உச்சி மாகாளி அம்மன் கோவில், இம்மூவரில் ஆவணி அம்மன் மூத்தவள் என்றும் மற்ற இருவரும் இளையவள்கள் என்றும் தலவரலாறு கூறுகிறது.





இறைபணியில் P. முருகேசன் உரிமையாளர்

சுவாமி விலாஸ் விபூதி ஸ்டோர்

186, 6வது தெரு பெரியப்பா நகர், பழனி, செல்9443012588

# வரம் தரும் வாள்மேல் நடந்த அம்மன் கோவில்





சிவகங்கை மாவட்டம் இளையான்குடி நகர் பகுதியில் அமைந்துள்ளது பிரசித்தி பெற்ற ஸ்ரீவாள்மேல் நடந்த அம்மன் திருக்கோவில். பக்தர்களால் சக்தி பீடமாக கருதபடும்

இக்கோவிலில் ஆண்டு நடைபெறும் நவராத்திரி திருவிழா சிறப்பு வாய்ந்தது ஆகும். மனமுருகி வழிபாடு செய்யும் பக்தர்கள் அனைவருக்கும் வரங்கள் தருவதாக பக்தர்களால் நம்பப்படுகிறது.

வாள்மெல் நடந்த அம்மன் நீதி தவறாமல் பக்தர்களை காப்பதாக கருதப்படுகிறது.ஆண்டு தோறும் பத்து நாட்கள் நவராத்திரி திருவிழா நடைபெறும் இதில் அம்மன் தினந்தோறும் பல்வேறு வாகனங்களில் சர்வ அலங்காரத்தில் காட்சி தருவார்.

விழாநிறைவு நாளில் விஜயதசமி தினத் தன்று வாள் மேல் நடந்த அம்மன் குதிரை வாகனத்தில் எழுந்தருளி அம்பு எய்தல் நிகழ்ச்சி நடைபெறும்.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தீமைகளை அழிக்க அம்மன் அம்பு ஏய்து வணங்கும் பக்தர்களுக்கு வரங் கள் தருவதாக ஆயிரக்கணக்கான மக்கள் வழிபாடு செய்துவருகின்றனர்.




திருஉத்திரகோசமங்கை திருக்கோவில் மகாகும்பாபிஷேக விழாவினைக் காண வரும் பக்த கோடி பெருமக்களை அன்புடன் அழைக்கிறோம்

உரிமையாளர் B.ரெத்ன காளீஸ்வரன்
Cell:94436 1225
70106 18500 / 86680 08318



ரெத்னா பட்டாசுகடை

MULTI BANK ATM/CASH MECHINE

கொரியர் சர்வீஸ்

DODLA பால்பொருள் மொத்த விற்பனையாளர்

பட்டாசு மொத்த விற்பனையாளர்

ஜெராக்ஸ், கலர் ஜெராக்ஸ், லேமினேஷன், செல்போன் சேல்ஸ் சர்வீஸ் மற்றும் அனைத்து வகையான ரீசார்ஜ் கார்டுகளும் கிடைக்கும்

9/378, காமராஜர் ரோடு, இளையான்குடி








# புற்றாக தோன்றிய மாரியம்மன்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் இருந்து சிவகங்கை செல்லும் வழியில் உள்ள காட்டு உடைகுளத்தில் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலில் பங்குனி பத்துநாட்கள் நடைபெறும்.

விழாவில் ஏராளமான பக்தர்கள் தீமிதித்து நேர்த்தி கடன் செலுத்தி வழிபடுவார்கள். இக்கோவிலில் உள்ள மரத்தில் பல ஆண்டு காலமாக அம்மன் மற்றும் விநாயகர் முகத்துடன் மாரியம்மன் காட்சிதருவதாக பக்த்தர்களால் வணங்கப்பட்டுவருகிறது. இங்கு நடைபெறும் ராகுகால பூஜைகள் கலந்து கொண்டு வேண்டிசெல்கின்றனர்.

புற்றுகோவிலை வழிபடவரும் போது முட்டைகள் வைத்து வழிபடுகின்றனர் பின்முட்டைகள் காகத்திற்கு உணவாக வழங்கப்படுகிறது. நாகர் புற்றுஅம்மனை வழிபட்டு நோய்கள் குணமாகியதாக கோவில் பரம்பரை பூசாரி சுப்பிரமணியன் கூறினார். மேலும் பயத்தால் பாதிப்படைந்தவர்களுக்கும் அம்மைநோயால் பாதிப்பு அடைந்தவர்களுக்கும் மஞ்சள் தீர்த்தம் வழங்கபடுகிறது.






அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் புற்று திருகோவிலுக்கு வருகை தரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்

காட்டுஉடைகுளம்

அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் புற்று திருக்கோவில்

கோவில் டிரஸ்ட்டி

S.P.சுப்பிரமணியன்

S.P. நாகராஜன் S.P. முருகன்

தயாபுரம் பஸ்ஸ்டாப் மானாமதுரை



D.தனபாலன்

பத்திர எழுத்தாளர்

9842409829/9791944001



பத்திரம் சம்பந்தப்பட்ட அனைத்தும் சிறந்த முறையில் செய்துதரப்படும்

மேற்கு ரதவீதி, அண்ணாசிலை அருகில், மானாமதுரை 630 606







aanmeegamalar.com

# குழந்தையாக வந்து குறைகளை தீர்க்கும் தாயமங்கலம் முத்துமாரியம்மன்



சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் இருந்து 18 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது தாயமங்கலம் 'கிராமம் முன்னொரு காலத்தில் இந்த ஊரை சேர்ந்த முத்து செட்டியார் என்ற வாணிபர் தினமும் மதுரை சென்று வாணிபம் செய்து விட்டு ஊர்திரும்புவார். அப்போது தினமும் மீனாட்சி அம்மனை வணங்கிவிட்டு தான் ஊர் திரும்புவார்.

குழந்தை இல்லாத அவர் மதுரை மீனாட்சியிடம் மனம் உருகி வேண்டினார். ஒரு நாள் ஊர்திரும்பும் போது வழியில் இருந்த ஊரணியில் நீர் அருத்தி காட்டுவழியில் நடத்து வந்தார். அப்போது அழகியபெண் குழந்தை அழுது கொண்டிருந்தது. குழந்தை இல்லாத நமக்கு மீனாட்சி குழந்தையாக வந்துள்ளார் என குழந்தையை தூக்கி தோளில் சுமந்து கொண்டு தாயமங்கலம் கண்மாய் வழியாக வணிகர் வந்தார். அப்போது திடீர் என குழந்தை மாயமாய் மறைந்து விட்டது.

குழந்தையை பல இடங் களில் தேடினார். எங்கும் குழந்தையை கானவில் வில்லை. வீடு திரும்பிய அவர் தன் மனைவியிடம் குழந்தை கிடைத்த விவரத்தை தெரி வித்து, பின் குழந்தை மாயமானது குறித்தும் கூறினார். அன்று இரவு முத்துசெட்டியார் வணி கரிடம் கனவில் மீண்டும் அந்த குழந்தை தோன்றி தான் கத்தாளங்காட்டில் தங்கி இருப்பதாவும் அங்கு எனக்கு கோவில் கட்ட வேண்டும், எனவும், கூறி மறைந்துவிட்டது.

அதை தொடர்ந்து அவர் அதிகாலை எழுந்து ஊர் பிரமுகர்களுடன் சென்றார். அங்கு கனவில் கூறிய இடத்தில் குழந்தை நடத்த பாதம் அடையாளம் தெரிந்தது. பின் பிடிமண் எடுத்து குடிசையில் முதலில் கோவில் அமைத்து குழத் தை உருமாறி வந்ததால்"

முத்து மாரி என அழைத்தனர். அதனை தொடந்து வறட்சியான பகுதிகள் செழித்தது. முத்துமாரிக்கு

1914ம் ஆண்டு கருங்கல்லில் திருஉருவ சிலை அமைக்கப்பட்டு கோவில் கட்டப்பட்டது. குழந்தை பாக்கியம், நோய் நொடிகள், தீராத அம்மை போன்ற நோய்களை அம் மன் குணமடைய செய்து வருகிறாள்.இன்றும் பக்தர்கள் கனவில் குழந்தையாக தோன்றி குறைகளை தீர்ப்பதால் ஏராளமான பக்தர்கள் தீசட்டி எடுத்து ஆடிவந்து தரிசனம் செய்துவருகின்றனர்.

ஆண்டுதோறும் பங்குனி மாதம் நடைபெறும் 10 நாள் திருவிழா சிறப்பு வாய்ந்தது ஆகும். நவராத்திரி, விழாவும் 10 நாட்கள் நடத்தப்படுகிறது. மதுரையில் இருந்து தாய மங்கலத்திற்கு நேரடி பஸ் வசதியுள்ளது.




கண்ணுச்சாமி தேவர்
காம்ப்ளக்ஸ்

உரிமையாளர் கே.குமரேசன்



மஹால், A/C. Non A/C ரூம்,
வீடு வாடகைக்கு கிடைக்கும்

Ph: 9860844645 / 8208034865 தாயமங்கலம்

# ஒவ்வொரு மாதத்திலும் பூஜைக்கு உகந்த பூக்கள்!

ஒவ்வொரு மாதத்திலும் உகந்த பூக்கள் என்று ஆகமங்கள் சில பூக்களைத் தெரிவிக்கின்றன.

அந்தந்த மாதங்களில், அந்தப் பூக்களைக் கொண்டு வழிபடுவது இன்னும் பல நன்மைகளையும் வளங்களையும் சேர்க்கும்.

**சித்திரை மாதத்தில்** முல்லைப்பூ, கானர்ப்பூ, கடம்பம்பூ, வாழைப்பூ ஆகிய மலர்களுடன் கோங்கு, அறுகு, நாயுருவி, விளா, வில்வம், மருக்கொழுந்து ஆகிய இலைகளைக் கொண்டு பூஜை செய்வதால் செல்வச் செழிப்பு ஏற்படும்.

இம்மாதத்தில் மலர் வகை யாவுமே தனிச்சிறப்பு மிக்கதாகக் கூறப்படுகிறது.

**வைகாசி மாதத்தில்** அரளி, செந்தாமரை, பாதிரி, நெருஞ்சில், சிறுவழுதலை, செவ்வந்தி ஆகிய மலர்களுடன் வன்னி, அறுகு, நாயுருவி, நொச்சி, விளா, வில்வம் ஆகிய இலைகளைக்கொண்டு பூஜை செய்வதால் சிவலோக முக்திநிலை கிட்டும்.

இம்மாதத்தில் இலை வகைகள் தனிச்சிறப்பு மிக்கதாக ஆகமங்களில் கூறப்படுகிறது.

**ஆனி மாதத்தில்** கடம்பம், சிவப்பு செண்பகம், தாமரை, பாதிரி, காக்கரட்டான் ஆகிய பூக்களும் இம்மாதத்தின் விசேஷ அபிஷேகத் திரவியமான புஷ்போதகத்திற்காக (மலர்கள் ஊறிய நீர்) சொல்லப்பட்டுள்ள புன்னை, நாகமல்லி, நந்தியாவட்டம், கருஊமத்தம்பூ, வெள்ளெருக்கம்பூ, மகிழம்பூ ஆகியவையுமாகும். இவற்றால் அபிஷேகித்தும், அர்ச்சித்தும் எண்ணிய பலன்களைப் பெறமுடியும்.

இம்மாதத்தில் பழவகைகள் தனிச்சிறப்பு மிக்க பலனைத் தருவனவாகும். எனவே பழமாலைகளை அணிவிப்பது சிறப்பானது.

**ஆடி மாதத்தில்** அலரிப்பூ, ஊமத்தம்பூ, கருங்குவளை, தும்பைப்பூ ஆகியவற்றுடன் வில்வ இலை சேர்த்து அர்ச்சித்தால் எதிர்ப்பு நீங்கும்; எதிரிகள் அழிவர்.

இம்மாதத்தில் பாலாபிஷேகம்; பால்பாயசம், திரட்டுப்பால், பால்பலகார வகை நிவேதனம் ஆகியவை தனிச்சிறப்பு பெறும்.

**ஆவணி மாதத்தில்** விஷ்ணுகிராந்தி, காக்கரட்டான்பூ, மல்லிகை, புன்னைப்பூ, சண்பகப்பூ,





அம்மன் அருளால் பரமக்குடி
அருள்மிகு ஸ்ரீ முத்தாலம்மன் திருக்கோவில், அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில், அருள்மிகு ஸ்ரீவேலங்குடி கருப்பண்ண சாமி திருக்கோவில்களில் திருப்பணி வேலைகள், பஞ்சவர்ணம் பெயிண்டிங் வேலைகள், கோபுர வேலைகள் செய்துள்ள ஸ்பதி


சிற்பக்கலை தென்றல் சிற்பி **K.முத்து** மதுரை-1
**9843570042 / 9443572756**

முல்லை மலர் ஆகிய வற்றுடன், ஆலமரத்தளிர் இலை கொண்டும் அர்ச்சித்தால் மண்ணுலகில் மட்டற்ற மகிழ்ச்சியை அடையலாம்.

**புரட்டாசி மாதத்தில்** தேவதாருமரப்பூ, விஷ்ணுகாந்தி, பொன்னூமத்தம்பூ, வெள்ளெருக்கம்பூ, தாமரைப்பூ ஆகிய வற்றுடன், சிறுசெண்பக இலை கொண்டு அர்ச்சனை செய்தால் செல்வச் சேர்க்கை ஏற்படும்.

**ஐப்பசி மாதத்தில்** வெள்ளைநிற சங்குப்பூ, வில்வப்பூ, சிறுவழுதலைப்பூ, சரக்கொன்றைப்பூ, மகிழம்பூ, பட்டிப்பூ, முல்லைப்பூ ஆகியவற்றுடன் தாமரை இலை சேர்த்து அர்ச்சித்தால், அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்கிற நால்வகை புருஷார்த்தங்களையும் அடையலாம்.

**கார்த்திகை மாதத்தில்** குடமல்லி, கரு நெய்தல், மல்லி கைப்பூ, வில்வப்பூ, பொரசம்பூ, பாக்குப்பூ ஆகியவற்றுடன் குருக்கத்தியிலை கொண்டு பூஜைசெய்தால், பிரம்ம ஹத்தி தோஷம் முதல் சகல தோஷமும் நீங்கும் என்று சொல்லப்பட்டுள்ளது.

**மார்கழி மாதத்தில்** தும்பைப்பூ, வெள்ளருகு, வெண் தாமரை, செந்தாமரை, அறுகுநுனி கொண்டு அர்ச்சனை செய்வதால் வீடுபேறு எனும் மோட்சம் பெறலாம்.

**தை மாதத்தில்** ஒற்றை நந்தியாவட்டம், அடுக்கு நந்தியாவட்டம், தாமரைப்பூ ஆகியவற்றுடன் நாயுருவி யிலை கொண்டு அர்ச்சனை செய்தால் வெகுகாலம் வாழ்வதற்கான ஆயுள் விருத்தி உண்டாகும்.



மாசி மாதத்தில் வெண்தாமரைப்பூ, மருதாணிப்பூ, சரக்கொன்றைப்பூ, மல்லிகைப்பூ, பொன்னூமத்தம்பூ எனும் சிவமல்லிகை ஆகியவற்றுடன் துளசி இலை கொண்டு அர்ச்சனை செய்வதால் அனைத்து பிணிகளும் நீங்கப்பெற்று நல்ல ஆரோக்கியம் ஏற்படும்.

பங்குனி மாதத்தில் தாமரைப்பூ, காசித் தும்பைப்பூ ஆகியவற்றுடன் நாகவல்லி எனும் வெற்றிலையைக் கொண்டு அர்ச்சனை செய்வதால் ஐஸ்வர்யம் உண்டாகும்.

# தெய்வீக அருள் நிறைந்த பங்குனி உத்திரம்

12வது மாதம் பங்குனியும், 12வது நட்சத்திரம் உத்திரமும் சேரும் நாள் பங்குனி உத்திரம் இந்த நாளில் சந்திரன் முழு நிலவாக அற்புதமாக காட்சியளிப்பார்.


சிவன்பார்வதி திருமணம் நடந்தது பங்குனி உத்திரத்தில்.

முருகன்தெய்வானை கல்யாணம் நடந்தது இத்திருநாளில்தான்.

ஸ்ரீராமன்சீதை, லட்சுமணன்ஊர்மிளை, பரதன்மாண்டவி, சத்ருக்னன் ஸ்ருதகீர்த்தி என்று தசரத மைந்தர்கள் திருமணங்களும் பங்குனி உத்திரத்தன்றுதான் ஒரே மேடையில் மிதி லையில் நடைபெற்றன.

தேவேந்திரன் இந்திராணி, நான்முகன் கலைவாணி ஆகியோரின் திருமணங்களும் பங்குனி உத்திரத்தன்றுதான் நடைபெற்றன.

மகாலஷ்மி அவதார நாள் பங்குனி உத்திரம் தான்.



மகாலஷ்மி நாராயணனின் மார்பில் அமர்ந்தது, சரஸ்வதி பிரம்ம தேவனின் வாக்கில் அமர்ந்தது போன்ற நிகழ்வுகள் நடைபெற்றதும் பங்குனி உத்திர தினத் தன்றுதான்.

இருபத்தேழு நட்சத்திரங்கள்சந்திரன் ஆகிய திருமணங் கள் நடந்தேறியது இந்த பங்குனி உத்திரத்தன்றுதான்.

மன்மதன் பிறந்தது இந்த நாளில்தான்.

மணிகண்டனாகிய, ஐயப்பன் பிறந்தது இதே நாள்தான்.

அர்ஜுனன் பிறந்தது இதே நாளே.

இந்த நாளில் முருகனை நினைத்து விரமிருந்தால் நமக்கு அற்புதமான பலன்கள் கிடைக்கும். திருமணத்தடை நீங்கும், அளப்பறியா செல்வங்கள் கிடைக்கும்.




# மதுரை மீனாட்சி அம்மனைப் பற்றி அறியப்படாத சிற்சில செய்திகள்...

மீனாட்சி அம்மன் விக்ரகம் மரகதக் கல்லால் ஆனது. ஏனென்றால் பொதுவாக அன்னையி ன் திருமேனி பச்சை நிறம்.

அன்னையின் வலது கால் சற்று முன் நோக்கி இருக்கும், ஏனென்றால் பக்தர்கள் அழைத்தா ல் உடனே ஓடி வருவதற்காக.

அன்னை கையில் ஏந்திய கிளி அன்னையின் காதில் பேசுவது போல் இருக்கும் ஏனென்றால் கிளி பேசுவதை திருப்பி பேசும் அதைப் போல் பக்தர்களின் வேண்டுதலை திரும்பத் திரும்ப அன்னையிடம் சொல்லும் இதனால் நமது வேண்டுதல் விரைவாக நிறைவேறும்.

அன்னையின் விக்ரகம் சுயம்பு ஆகும் சில ஆலயத்தில் லிங்கம் சுயம்புவாக இருக்கும் ஆனால் மதுரையில் மீனாட்சி உக்ரபாண்டிய னுக்கு முடிசூட்டிய பின் சொக்கநாதர் பெருமான் அருகில் விக்ரகமாக நின்றுவிட்டாள் அதனால் சுயம்பு அன்னை.

அன்னை மதுரையில் யாகசாலையில் அக்னி யில் அவதரித்தாள். இவளின் இயர்பெயர் தடாதகை அங்கயற் கண்ணிஆகும்.

பாண்டிய மகாராஜாவுக்கும் மஹாராணி காஞ்சன மாலைக்கும் ஒரே மகள். அதனால் பாண்டிய நாட்டின் பேரரசி ஆவாள்.

இங்கு கற்பகிரகத்தில் அன்னையின் விக்ரக ம் உயிருடன் இருக்கும் ஒரு பெண்ணை பார்ப்பது போல் இருக்கும்.

அன்னையே சிலையாக இருப்பதால் மிகவும் அழகாக இருக்கும் இவளை பார்த்து கொண் டே இருக்க வேண்டும்போல் இருக்கும்.

அன்னையின் சிலை மிகவும் நளினமாக இருக்கும் அன்னையின் சன்னதியில் தாழம்பூ குங்குமம் பிரசாதமாக தரப்படும்.

மதுரையில் அன்னைக்கே முதல் மரியாதை. இங்கு அம்பிகையை முதலில் வணங்க வேண்டும். பின்னர் தான் சுவாமியை தரிசிக்க வேண்டும்.

மீனாட்சி சுந்தரேஸ்வரர் மதுரையை அன்றும் இன்றும் என்றும் ஆட்சி செய்வார்கள் என்பது சிவவாக்கு. இங்கு எம்பெருமான் 64 திருவிளையாடல் புரிந்து உள்ளார். வேறு எந்த ஆலயத்திலும் இத்தனை திருவிளையாடல் புரிந்தது இல்லை.

அனைத்து சிவ ஆலயமும் முக்தியை தரும் ஆனால் சிவ ஆலயத்தில் சகல செல்வமும் தரும் கோவில். மீனாட்சி சுந்தரேஸ்வரர் வாழ்ந்ததால் மதுரைக்கு வந்தாலே முக்தி.

இந்த கோவில் அம்மன் பெயரில் அழைக்கப்படுகிறது. உலகின் பெரிய அம்மன் கோவில். சக்தி பீடமும் ஆகும்.


வாழ்நாளில் ஒருமுறையாவது தரிசிக்க வேண்டிய ஆலயம். சித்திரை திருவிழா அன்னைக்கும் ஆவணிமூல பெருவிழா சுவாமிக்கும் நடக்கும். மிகவும் அழகான கோபுரங்கள் கொண்ட கோவில்.

தமிழகத்தில் மிகப்பெரிய விழா நடக்கும் முதல் ஆலயம். சைவமும் வைணவ சமயமும் ஒன்றாக கொண்டாடும் விழா.

உலக அதிசியங்களுள் ஒன்று மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில் என்றே கூறலாம். இவளை சரண் அடைந்தால் நம்மை காப்பாள் அன்னை மீனாட்சி. நவராத்திரி 4ம் நாள் அன்று நமது சிவகங்கை விஸ்வநாதர் ஆலயத்தில் விசாலாட்சி மீனாட்சி அம்மன் அலங்காரத்தில் அருள்பாலிக்கிறாா்.

மதுரையில் மீனாட்சி தினமும் 8 விதமான சக்திகளாகப் பாவிக்கப்பட்டு ஆராதிக்கப் படுகிறாள். இது மற்ற கோவில்களில் இல்லாத ஒரு சிறப்பு.

அன்னைக்கு 5 கால பூஜைகள்





aanmeegamalar.com

நடக்கும். காலையில் சின்ன பெண் போன்ற அலங்காரம், உச்சி காலத்தில் மடிசார் புடவை, மாலை நேரத்தில் தங்க கவசம், வைரக்கிரீடம் போன்ற அலங்காரங்கள். இரவு அர்த்த ஜாமத்தில் வெண்பட்டாலான புடவை என்ற அலங்காரங்களுடன் அன்னையைக் காண ஆயிரம் கண்கள் வேண்டும்.

எல்லா கோவில்களும் போல இங்கும் பள்ளியறை அம்மன் சன்னதியில் இருக்கிறது. இரவு சுந்தரேஸ்வரரது வெள்ளிப் பாதுகைகள் ஸ்வாமி சன்னதியில் இருந்து பள்ளியறை வரும். பாதுகைகள் வந்த பின் அன்னைக்கு விசேஷ ஹாரதி (மூக்குத்தி தீபாராதனை ) நடக்கிறது.

அதன் பின்னர் அம்பிகையின் சன்னதி மூடப்பட்டு பள்ளியறையில் பூஜை, பால், பழங்கள், பாடல்கள், வாத்ய இசை என்று சகல உபசாரங்களுடன் இரவு கோவில் நடை சாத்தப்படுகிறது.

மதுரையில் பள்ளியறை பூஜை பார்க்கப் பார்க்கத் திகட்டா காட்சி. பள்ளியறை பூஜை சிவ ஸ்ரீ சக்தி ஐக்யத்தை உணர்த்துவதால் இந்த தரிசனத்திற்கு சிறப்பு அதிகம்.

மேலும் கணவன் மனைவி ஒற்றுமைக்கு மதுரை மீனாட்சி கோவிலில் தினமும் நடைபெறும் பள்ளியறை பூஜையை தரிசித்தல் நல்ல பயனைக் கொடுக்கும்.

பிள்ளை இல்லாதவர்கள் காலையில் மீனாட்சியின் சிறுபிள்ளை அலங்காரத்துடன் நடக்கும் ஆராதனையை தரிசித்து மனமுருகி வேண்டினால் கட்டாயம் பலன் தருவாள் அன்னை என்கின்றனர்.

வியாபார நஷ்டம் தொழில் மற்றும் வேலையில் பிரச்சனை உள்ளவர்கள் அன்னையின் வைர கிரீட அலங்காரம் கண்டு முன்னேற்றம் பெறலாம்.

மீனாட்சி அம்மன் சிலை பச்சை மரகத கல்லிலால் ஆனது. கருவறை பக்கம் மேளம் நாதஸ்வரம் போன்ற இசைகருவிகளை இசை க்க மாட்டார்கள். கல் என்றாலே கடினமானது என்று சொல்வார்கள்.

மரகதகல் மென்மை யானது. மேளம் நாதஸ்வரம் போன்ற இசை கருவிகளை இசைக்கும் போது வரும் ஒலி அதிர்வுகளை தாங்கி கொள்ள முடியாதது. அப்படிப்பட்ட ஒரு கல்லை (ஒலி அதிர்வுகளை கூட தாங்க முடியாது) உளியால் செதுக்கி மீனாட்சி அம்மன் சிலை செய்து இருக்கிறார்கள்.



# தாயமங்கலம் அம்மன் இருக்கும் திசைநோக்கி வீட்டுவாசலில் பொங்கல் வைக்கும் பக்தர்கள்

மதுரை மீனாட்சி அம்மன் தன் தீவிர பக்தர்க்கு குழந்தையாக காட்சிகொடுத்த இடம் மீனாட்சியே உருமாறி காட்சி தந்ததால் மாரியம்மன் திருப்பெயரால் கோவில் எழுப்பபட்டது.

இங்கு வரும் பக்த்தர்களால் தமிழகத்தில் அரசுபோக்குவரத்து கழகத்திற்கு அதிக வருவாய் ஏற்படுத்தி கொடுத்த கோவில் தாயமங்கலம் ஆகும்.

கடும் கோடைவெயிலின்போது இங்கு நடைபெறும் பங்குனி திருவிழா கொடியேற்றத்தின்போது இரவில் மழையும், பொங்கல் விழாவின் போது பகலில் மழையும் பெய்யும் இது ஆன்மிக அதிசயமாக பக்த்தர்கள் கருதுகின்றனர்.

மதுரை சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில்பங்குனி பொங்கல் விழாநாளில் தங்கள் வீட்டுக்கு முன்பு தாயமங்கலம் முத்துமாரியம்மன் இருக்கும் திசைநோக்கி பொங்கல் வைத்து வழிபாடு செய்வது இன்றும் வழக்கத்தில் உள்ளது. திருவிழா காலம் மட்டும்மின்றி ஆண்டு முழுவதும் பக்தர்கள் கோவில் வந்து நேர்த்தி கடனை செலுத்தி வருகின்றனர்.



# நின்ற கோலத்தில் அருள்புரியும்
# தாயமங்கலம் முத்துமாரிஅம்மன்

aanmeegamalar.com

தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இளையாங்குடி வட்டாரத்தில் அமைந்துள்ள ஒரு கிராமம் தாயமங்கலம் ஆகும்.

சிவகங்கை மாவட்டம் இளையான் குடியில் இருந்து 11 கிமீ தொலைவிலும், மானாமதுரையில் இருந்து 30 கிமீ தொலைவிலும், சிவகங்கையில் இருந்து 32 கிமீ தொலைவிலும், காளை யார்கோவிலில் இருந்து 18 கிமீ தொலைவிலும், ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில்இருந்து 22 கிமீ தொலைவிலும், மதுரையில் இருந்து 88 கிமீ தொலைவிலும் உள்ளது தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயில்.

இத்திருக்கோவிலில் வீற்றிருக்கும் அம்மன் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளார். இத்தலத்து அம்மன் சிறுமி வடிவத்தில் வணங்கப் பட்டு வருகிறார். இக்கோவிலில் வருடா வருடம் தமிழ் மாதம் பங்குனி மாதத்தில் 10 நாட்கள் மிக விமரிசையாக திருவிழா நடைபெறும்.

இந்த 10 நாட்கள் கொண்ட திருவிழாவில் தேரோட்டம் மிகவும் சிறப்பான வைபவம் ஆகும்.இத் திருக்கோவிலின் அமைப்புப்படி, கிழக்கு திசையில் அம்மனின் பார்வை பட, கொடிமரம் எதிர் அமைத்து, வடபுறம் தெப்பக்குளம் உருவாக்கி 1914ல் கட்டப்பட்டுள்ளது.

இந்த கோவிலில் முத்துமாரியம்மன் வீற்றிருக்க, அருகே விநாயகர், முருகன் மற்றும் சோனையா உள்ளிட்ட இஷ்ட தெய்வங்கள் காட்சியளிக்கின்றனர். இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இத் திருக்கோவில் உள்ளது.

கன்னித் தெய்வமாக இருந்து சுற்று வட்டாரத்தில் 22 கிராம மக்களுக்கும், தாயாகவும், மாங்கல்ய பாக்கியம் எனும் மங்கல வரம் அருளும் நாயகியாகவும் இருந்து அம்மன் அருள்பாலிக்கும் ஊர் என்பதால், 'தாய்மங்கலம்' என இவ்வூர் அழைக்கப்பட்டதாம். அதுவே, பின்னர் தாய மங்கலமாக மருவியது என்கிறார்கள்.

கன்னித் தெய்வமாய் கோயில் கொண்டிருக்கிறாள், ஸ்ரீமுத்துமாரியம்மன். இத்தெய்வம் கன்னித்தெய்வமாக இருப்பதால் திருமண வரம் வேண்டுவோர், தாலிப்பொட்டினை அம்மன் காலடி யில் சமர்ப்பித்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இத்தலத்து வரலாற்றுப்படி, பல ஆண்டுகளுக்கு முன்பு, இப்பகுதியைச் சேர்ந்த வணிகர்கள் தங்கள் பகுதியில் விளையும் பொருட்களை விற்பனை செய்வதற்காக, அடிக்கடி மதுரைக்குச் சென்று வருவது வழக்கம். இந்த கிராமத்தைச் சேர்ந்த முத்துச் செட்டியார், இவர் மீனாட்சியம்மன் மீது அதீத பக்தி கொண்டவர். மதுரைக்கு வியாபார நிமித்தமாக செல்லும்போதெல்லாம் மீனாட்சியையும், சொக்கநாதரையும் தவறாமல் வழிபட்டு வருபவர், அப்படி ஒரு நாள் மீனாட்சியம்மனிடம், தனக்கு குழந்தை இல்லாததை எண்ணி மனமுருகி வேண்டி மதுரையில் இருந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்தார். வழியில், சிறுமி ஒருத்தி பாதை தெரியாமல் அழுது கொண்டிருந்ததை கண்டார். அந்தச் சிறுமியை விசாரித்தபோது, தனது பெயர் முத்துமாரி என்றும், தனது தாய் தந்தையிடமிருந்து பிரிந்து விட்டேன் என்றும் எங்கு போவதென வழிதெரிய வில்லை என்றும் கூறி தேம்பினாள்.




"கவலைப்படாதே அம்மா! உன்னை நான் பத்திரமாகப் பார்த்துக்கொள்கின் றேன்" எனக் கூறி அந்தச் சிறுமியை தன்னுடன் அழைத் துப் போனார். மதுரை மீனாட்சியே இந்தக்குழந் தையை தனக்குத் தந்ததாக எண்ணினார். ஆனால், அவரது சந்தோஷம் நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

செல்லும் வழியில் அங்குள்ள குளத்தின் அருகில். பயணக்களைப்பாக இருந்ததால், சிறுமியை கரையில் உட்கார வைத்துவிட்டு குளத்தில் இறங்கி குளிக்கப் போனார். ஆனால், குளித்து முடித்துவிட்டு கரைக்கு வந்து பார்த்தால், குழந்தையைக் காணவில்லை. இதனால் மனம் வெறுத்துப்போன முத்துச் செட்டியார் தன் மனைவியிடம் நடந்ததையெல்லாம் கூறிவருந்தினார். இரவு உணவைகூட சாப்பிடாமல், படுக்கப் போனவர் அப்படியே கண்ணயர்ந்து விட்டார்.

அவரது கனவில், 'சிறுமியாக வந்தது நான்தான் என்றும் ஊருக்கு அருகாமையிலிருக்கும் கள்ளிக்காட்டில், நான்உறைய இருக்கிறேன் என்றும் கோயில் கட்டி வழிபடுபவர்களுக்கு, வேண்டும் வரங்களை அருளுவேன் என்றும் கூறி மறைந்தாள் முத்துமாரி. படுக்கையில் இருந்துஎழுந்த வியாபாரி, தன் மனைவியிடம் எல்லாவற்றையும் கூறினார்.

மறுநாள் பொழுது விடிந்ததும் முதல் வேலையாக ஆற்று மணலில் அம்மன் சிலையை அமைத்து வழிபடத்தொடங்கினார். இவரைத் தொடர்ந்து ஊர் மக்களும் வழிபட்டனர். நாளடைவில் அந்தப் பகுதி மக்களின் கண்கண்ட தெய்வமானாள் முத்து மாரியம்மன்.

அம்மை நோயினால் பாதிக் கப்பட்டவர்கள், செவ்வாய் வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் கோயிலுக்கு வந்து வணங்கி இங்கிருந்து தீர்த்தம் பெற்றுச்சென்றால் நோய் குணமாகும்





என்பது இங்குள்ள மக்களின் நம்பிக்கையாக இருக்கிறது. இதுதவிர திருமண வரம், குழந்தை பாக்கியம் வேண்டியும் ஏராளமான பக்தர்கள் வருவதையும், பிரார்த்தனை நிறைவேறி நேர்த்திக்கடன் செலுத்து பவர்களையும் இங்கு காணலாம். மாவிளக்கு எடுத்தல், கரும்பு தொட்டிலில் குழந்தையை சுமந்து வருதல், கண்மலர் காணிக்கையாக்குதல் என பல்வேறு நேர்த்தி கடன்களை பயபக்தியுடன் செய்வர்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் மாவிளக்கு எடுத்தும் தீச்சட்டி, பால்காவடி, சிலா குத்தல், வேல், அலகு குத்துதல், கரும்புத் தொட்டில், ஆயிரம் கண் பானை எடுத்தும் அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். விழா காலங் களைத் தவிர மற்ற நாட்களில் தினசரி பூஜைகள், அன்னதானம் நடைபெறுகிறது. கண் நோய் உள்ளவர்களுக்கு இங்கு அம்மன் சன்னதியில் அபிஷேக தீர்த்தம் கொடுக்கின்றனர்.

கண்பிரச்சினை தீர்ந்தவுடன் கண்மலர் செலுத்தியோ அல்லது அங் கப்பிரதட்சனை செய்தோ தங்களின் நேர்த்திக்கடனை செலுத்து கின்றனர்.

திருவிழாவை தொடர்ந்து பக்தர்கள் வசதிக் காக, மதுரை, கமுதி, காளையார்கோவில், பார்த்தி பனூர், இளையான்குடி, அருப்புக்கோட்டை ஆகிய ஊர்களிலிருந்து சிறப்பு பேருந்து தாயமங்க லத்திற்கு இயக்கப்பட்டு வருகிறது.


9047856023
9047856023



துளசி
டெக்ஸ்டைல்ஸ்
சில்க்ஸ் ரெடிமேட்ஸ்

ஆடவர் விரும்பும் ஆயத்த ஆடைகள், பூவையர் மயங்கும் அனைத்து வகை ஆடைகள், திருமண பட்டு, அனைத்து வகை சேலைகள் மனம் நிறைவாக தரம் உயர்வாக, விலை குறைவாக கிடைக்கும்.

இங்கு தையல் இயந்திரத்திற்குத் தேவையான அனைத்து வகை உதிரிபாகங்கள் ஊசி, நூல்கள் கிடைக்கும்

உரிமையாளர்: துளசிராமன் புல்லப்பன்

04, நூர் முகம்மது தெரு, சாலையூர், இளையான்குடி-630 702



அருள்மிகு தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்




ஸ்ரீ மாரீஸ் ஸ்டோர் தயாநகர், மானாமதுரை
ஸ்ரீ மாரீஸ் ரியல் எஸ்டேட் தயாநகர், மானாமதுரை
ஸ்ரீ மாரீஸ் வெல்டிங், கொன்னக்குளம், மானாமதுரை

A.சுரேஷ்குமார் 9751612979
A.பூமிநாதன் 8122522570
A.S.கமலேஸ்வரன் 9080075007







# தீராத நோய்களை தீர்க்கும் தாயமங்கலம் முத்துமாரிஅம்மன்

தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்தில் உள்ள இளையாங்குடி வட்டாரத்தில் அமைந்துள்ள ஒரு கிராமம் தாயமங்கலம் ஆகும்.

மதுரையில் இருந்து 88 கிமீ தொலைவில் உள்ள தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோவில் இத்திருக் கோவிலில் வீற்றிருக்கும் அம்மன் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளார்.

இத்தலத்து அம்மன் குழந்தை வடிவில் தோன்றி அன்னை மீனாட்சியாகவே நின்றகோலத்தில் பக்தர்களுக்கு காட்சிதருகிறாள்.

ஆண்டு தோறும்தமிழ் மாதம் பங்குனி மாதத்தில் 10 நாட்கள் மிக விமரிசையாக திருவிழா நடைபெறகிறது.

இத்திருக்கோவிலின் அமைப்புப்படி, கிழக்கு திசையில் அம்மனின் பார்வை பட, கொடிமரம் எதிர் அமைத்து, வடபுறம் தெப்பக்குளம் உரு வாக்கி தீர்த்தகுளமாககருதபடுகிறது. இங்கு வருபவர்கள் முதலில் குளத்தில் நீராடி பின் தீசட்டி, அங்கபிரதட்சனம், பால்குடம், கரும்பு தொட்டில் எடுத்து நேர்த்தி கடன்செலுத்துவார்கள்.



ஆண்டு தோறும் பொங்கல் விழாவின்போதுமட்டும் இரண்டு நாட்கள் பக்தர்கள் 24 மணிநேரமும் தரிசனம்செய்யலாம்.

பிறநாட்களில் காலை7 மணிமுதல் இரவும்7 மணிவரை பக்தர்கள் அனுமதிக்க படுகின்றனர். தீராத நோய்களையும் பக்தர்கள் கனவில் தோன்றி என்னை நாடிவா என அம்மன் கூப்பிட்டதாகவும் அம்மனின் அருள் பெற்ற பக்தர்கள் பலர் இன்றும் தெரிவிக்கின்றனர்.

இதற்காக ஆதாராமாக திருவிழா காலத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தீச்சட்டி ஏந்தி கோவிலை வலம் வருவதை இப்போதும் காணலாம்.

தீர்த்தகுளம் என்பதால் திருவிழாவின் போது குளம் தூர்வாரி சீரமைக்கப்பட்டு தண்ணீர் நிரப்பபடுவதாக கோவில் அறங்காவலர் வெங்கடேசன் செட்டியார் தெரிவித்தார்.

பக்தர்கள் எந்த குறையும்இன்றி மனமகிழ்ச்சியுடன் சுவாமி தரிசிக்க சிறப்பு ஏற்பாடுகள் செய் யப்பட்டு உள்ளது. தற்போது முத்து மாரியம்மனுக்கு தேர் செய்யும் பணிகள் நடைபெற்றுவருகிறது.

aanmeegamalar.com

# தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில்



## பங்குனி பெருந்திருவிழா

திருவிழா காண வரும் பக்த கோடி பெருமக்களே வருக! வருக!!
தாயமங்கலம் ஸ்ரீ முத்துமாரியம்மன் அருள் பெறுக!

| | |
|---|---|
| 29.03.2025 சனிக்கிழமை | காலை நவசகிதி ஹோமம், மாலை லட்சார்ச்சனை, கொடியேற்றம் இரவு காப்பு கட்டுதல் |
| 30.03.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை லட்சார்ச்சனை |
| 5.4.2025 சனிக்கிழமை | பொங்கல் வைபவம் |
| 6.4.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை மின்சார தீபத்துடன் தீப அலங்காரத்துடன் ரதம் |
| 7.4.2025 திங்கள்கிழமை | காலை பால்குடம் இரவு புஷ்ப பல்லாக்கு |
| 8.4.2025 செவ்வாய்க்கிழமை | திருக்கோவில் தீர்த்தவாரி |

திருக்கோயில் தேர், தங்கரதம்
திருப்பணி நடைபெறுவதால் நன்கொடை
வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.



திருக்கோயிலில்
நடைபெறும் அன்னதானத்
திட்டத்திற்கு நன்கொடை
வழங்க வேண்டுகிறேன்

மதுரை, மானாமதுரை, காரைக்குடி,
பரமக்குடி, இளையான்குடி, சிவகங்கை
அருப்புக்கோட்டை ஆகிய ஊர்களிலிருந்து
இரவு பகலாக அரசு சிறப்பு பஸ்
வசதி செய்யப்பட்டுள்ளது



அன்புடன்அழைக்கும்:



**மு.வெங்கடேசன் செட்டியார்**
பரம்பரை அறங்காவலர், அருள்மிகு முத்துமாரியம்மன்
திருக்கோவில், தாயமங்கலம், இளையன்குடி வட்டம்

திருக்கோவில் போன்:04564-206614
www.thayamangalammuthumari.org

SML Graphics, Chennai 9444228203

aanmeegamalar.com

# மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழா

28 ஏப்ரல், 2025: திங்கட்கிழமை மாலை வாஸ்து சாந்தி

29 ஏப்ரல் 2025 செவ்வாய்க்கிழமை

காலை: சித்திரை திருவிழா கொடியேற்றம் (கொடியேற்றம்) காலை 9:35 to 10:59 மணிக்குள் கொடியேற்றம்

இரவு: 7 மணி முதல் 10.30 மணி வரை கற்பக விருட்சம், சிம்ம வாகனம்

30 ஏப்ரல் 2025 புதன்கிழமை

காலை: 7 முதல் 9.30 வரை தங்க சப்பரம்

இரவு: 7 மணி முதல் 10.30 மணி வரை பூத வாகனம், அன்ன வாகனம்

01 மே 2025 வியாழக்கிழமை

காலை: 7 முதல் 9.30 வரை தங்க சப்பரம்

இரவு: 7 மணி முதல் 10.30 மணி வரை கைலாச பர்வதம், காமதேனு வாகனம்

02 மே 2025 வெள்ளிக்கிழமை

காலை: 9 மணி தங்க பல்லக்கு

இரவு: மாலை 6 மணி முதல் 9.30 மணி வரை தங்க பல்லக்கு

03 மே 2025 சனிக்கிழமை

காலை: 9 மணி தங்க சப்பரம்

இரவு: 7 மணி முதல் 9.30 மணி வரை வேடர் பரி லீலை தங்க குதிரை வாகனம்

04 மே 2025 ஞாயிற்றுக்கிழமை

காலை: 7.30 முதல் 10.30 வரை தங்க சப்பரம்

இரவு: 7.30 மணி முதல் 11.00 மணி வரை சைவ சமய ஸ்தாபித வரலாற்று லீலை ரிஷப வாகனம்

(தங்க ரிஷபம், வெள்ளி ரிஷபம்)

05 மே 2025 திங்கட்கிழமை

காலை: 8 முதல் 10.30 வரை தங்க சப்பரம்

இரவு: 7 மணி முதல் 10.30 மணி வரை நந்தீகேஸ்வரர், யாழி வாகனம்

06 மே 2025 செவ்வாய்க்கிழமை

காலை: 10 மணி தங்க பல்லக்கு

மாலை: ஸ்ரீ மீனாட்சி பட்டாபிஷேகம் (பட்டாபிஷேக நேரம்: மாலை 07:35 to 07:59 மணிக்குள் பட்டாபிஷேகம்

இரவு: 9 மணி முதல் 11 மணி வரை வெள்ளி சிம்மாசனத்தில் சுவாமி அம்பாள் வீதியுலா.

07 மே 2025 புதன்கிழமை

காலை: 7 முதல் 9.30 வரை மரவர்ண சப்பரம்

மாலை / இரவு: மாலை 6 மணி முதல் 11.30 மணி வரை ஸ்ரீ மீனாட்சி திக்விஜயம் இந்திர விமான உலா

08 மே 2025 வியாழக்கிழமை

காலை: 4 மணி வெள்ளி சிம்ஹாசனம்

காலை: ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் (காலை: 8:35 to 8:59 மணிக்குள் திருக்கல்யாணம் )

இரவு: 7.30 முதல் 11.30 வரை தங்க அம்பாரியுடன் கூடிய யானை வாகனம், புஷ்ப பல்லக்கு

09 மே 2025 வெள்ளிக்கிழமை

திரு தேர் தேரோட்டம் (ரத உற்சவம் தேர் திருவிழா) திருத்தேர் எழுந்தருளல் நேரம்: காலை 5:30

திருத்தேர் வடம்பிடித்தல் நேரம்: காலை 6:30 மணிக்கு

இரவு: 7 மணி முதல் 10.30 மணி வரை சப்தாவர்ண சாப்ரம்

10 மே 2025 சனிக்கிழமை

தீர்த்தம்,

இரவு: 7 மணி முதல் 10 மணி வரை




Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்



தன்வந்திரி ஆயுர்வேத வைத்தியசாலை

அரசு பதிவு பெற்ற மருத்துவமனை

HOSPITAL Regn. No. : MADUAYU20210028270 ◆ ISO 9001 : 2015 CERTIFIED HOSPITAL

இங்கு தங்கி சிறப்பு சிகிச்சை பெறுபவர்களுக்கு மருத்துவ காப்பீடு வசதி உண்டு

மதுரை தெப்பக்குளம்:
அனுக்கிரஹா இல்லம், கண்ணன் டிபார்ட்மெண்டல் ஸ்டோர் எதிர்புறம், அன்னை சந்திரமதி கல்யாண மஹால் அருகில், பங்கஜம் காலனி, தெப்பக்குளம், மதுரை - 625 009 அலைபேசி: 93601 32500

சென்னை:
16/25, சந்தானகிருஷ்ணன் தெரு, நேரு நகர், அஸ்தினாபுரம் ரோடு, MIT front கேட் அருகில், குரோம்பேட்டை, சென்னை - 600 044 அலைபேசி: 75024 99666

இராமநாதபுரம் கிளை:
NO 9, RR சேதுபதி நகர். காவல் நிலையம் பின்புறம். இராமநாதபுரம். அலைபேசி: 9944167183. 9360132498

41/130-A, பாலாஜி தெரு, அழகப்பன் நகர், மதுரை 625 003.

Email: drkarthic@gmail.com web: www.drkdhanvanthriclinic.com

Ph: 0452-2692647 mobile: 87604 44404, 73731 166111, 80980 01791



தலைமை மருத்துவர் :
Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்
B.A.M.S., MD., FICA., PG Geriatrics





aanmeegamalar.com



ராமருக்கு உதவிய அணில் போல... ஊர் கூடி தேர் இழுப்பது போல...

## மன்னர்கள் வழியில் ஆலயத் திருப்பணி செய்வோம்... வாருங்கள் பக்தர்களே...

மதுரை அழகர்கோவில் அருகே பொய்கைக்கரைப்பட்டியில் தொடங்கப்பெற்றிருக்கும்

# ஸ்ரீ மஹா பெரியவா ஆலயத் திருப்பணியில் பங்கேற்க அன்பு வேண்டுகோள்

**பூசலார் நாயனார்...** சிவபெருமானுக்கு ஒரு ஆலயம் கட்ட வேண்டும் என நினைத்து, தன்னிடம் அதற்கான வசதி இல்லாத போது மனதிலேயே ஆலயம் கட்டுவது போல நினைத்துக் கொண்டார், எப்படி? இன்று வானம் தோண்டுகிறோம். அஸ்திவாரம் போடுகிறோம். கட்டிடம் எழும்புகிறது. கோபுரம் கட்டுகிறோம் என ஒரு கோயிலை கட்ட எத்தனை நாட்களாகுமோ அத்தனை நாட்களும் மனதாலேயே கோயில் கட்டினார்.

**சிவனின் திருவிளையாடலாக...** அதே சமயத்தில் சோழ மன்னர் ஒருவரும் சிவனுக்கு கோவில் கட்ட, பூசலார் நாயனார் கட்டிய மனக்கோயிலில் எழுந்தருளிய சிவபெருமான் மன்னர் மூலமாக அவரது பக்தியை உலகறியச் செய்தார். பூசலார் நாயனாரின் இருதயத்தில் எழுந்த கோயில் என்பதால், சென்னை அருகே திருநின்றவூரில் **"இருதயாலீஸ்வரர்"** என்ற பெயரில் இன்றும் இருக்கிறது இக்கோயில்.

## பாக்கியத்தை தவறவிடலாமோ?

**சொந்தமாக நமக்கென ஒரு வீடு கட்டுவதே குதிரைக் கொம்பு!' எனும் போது இறைவனுக்கு கோயில் கட்டுவது அவ்வளவு எளிய விஷயமா? ஒரு கோயிலுக்கான திருப்பணியில் நாம் பங்கெடுக்கும் வாய்ப்பு வருகையில் நாம் அதை தவற விட்டு விடலாமா? எவ்வளவு பெரிய பாக்கியம் அது!**

**கருணைக்கடல் காஞ்சி மகா பெரியவர் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளால் இதோ அந்த வாய்ப்பு உங்களைத் தேடி வந்திருக்கிறது.**

புண்ணிய திருத்தலமான 'திருமாலிருஞ்சோலை' எனப்படும் **மதுரை கள்ளழகர் கோயில் மலை அடிவாரத்தில், காஞ்சி ஸ்ரீ மகா பெரியவருக்கு திருக்கோயிலை அமைக்க இருக்கிறது 'மதுரை அனுஷத்தின் அனுகிரஹம்'.**

கள்ளழகர் திருக்கோயிலின் தீர்த்தக்குளம் அமைந்திருக்கும் பொய்கைக்கரைப்பட்டியில், இயற்கை எழில் சூழ பொலிவுற அமையவிருக்கிறது, இந்தக் கோயில். இதற்கான பூர்வாங்க பணிகள் கடந்த 6-3-2025 அன்று தொடங்கப்பெற்றது.

**மதுரை, S.S.காலனி, எண்.13, பொன்மேனி நாராயணன் ரோட்டில் 'ஸ்ரீ காஞ்சி மகா பெரியவா கிருஹம்'** என்னும் கோயிலை நிர்வகித்து நடத்தி வரும் 'அனுஷத்தின் அனுக்கிரஹம்' நிறுவனர் **நெல்லை பாலு** அவர்களின் சீரிய முயற்சியால் அமையவிருக்கிறது இந்தக்கோயில். அடுத்த ஓராண்டுக்குள் இந்தக் கோயில் கட்டுமானம் பூர்த்தி பெற்று ஸ்ரீ காஞ்சி மகா பெரியவா சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் அருள் ஆசியோடு கும்பாபிஷேகம் செய்யப்பட இருக்கிறது.

அவரது அருளாசியைப் பெற்ற பக்தர்கள் **"ராமருக்கு உதவிய அணில் போல", ஊர் கூடி தேர் இழுப்பது போல"** இந்தப் புனிதத் திருப்பணியில் பங்கு பெறும் அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள அன்போடு அழைக்கிறோம்.

**எப்படி உதவலாம்?** இத்திருப்பணிக்கு பணமாக மட்டுமின்றி கட்டிட தளவாட சாமான்கள், இதர பொருட்களாகவும் வாங்கிக் கொடுக்கலாம். கோயில் அமையவிருக்கிற இடம், கட்டுமானத்தைச் சேர்த்து சதுர அடி ஒன்றுக்கு ரூ.3,500 ஆகும்.

**அன்பர்கள் சதுரடி 3500/- வீதமாக 2,5,10 சதுர அடி என தாங்கள் விரும்பும் அளவுகளில் அதற்கான தொகையினைத் தந்தும் இத்திருப்பணிக்கு உதவலாம்.**

கோயில் அமைவதற்கான செலவுகள் பல லட்சங்களைத் தொடுவதால் ரூ.1லட்சம் மற்றும் அதற்கு மேல் நன்கொடையாகப் பங்களிப்பு செய்யும் கொடையாளர்களின் பெயர்கள் கோயில் கல்வெட்டிலும் பொறிக்கப்பட இருக்கிறது.

நன்கொடைகளுக்கு 80G வரிவிலக்கு உண்டு

**நன்கொடைகளை அனுப்ப**

G Pay PhonePe **94426 30815**

Cheque, M.O. மூலமாகவும் பணம் அனுப்பலாம்

மக்கள் பணியில்... **Rtn. நெல்லை பாலு.**
நிறுவனர், அனுஷத்தின் அனுக்கிரஹம்
G-102, சாந்தி சதன் குடியிருப்பு,கோச்சடை,
மதுரை - 625016. செல் : 9442630815

Account Details :
**MADURAIYIN ATCHAYA PAATHIRAM TRUST**
**A/c No.110031396472**
**Canara Bank**
**Madurai West Avani Moola Street Branch**
**IFSC Code: CNRB0001010**
**MICR : 625015006**



மதுரை அழகர்கோவில் அருகே பொய்கைகரைப்பட்டியில் அமைய இருக்கும் ஸ்ரீ மஹாபெரியவா கோவில் கட்டுமான பணி தொடக்க விழாவில் மதுரை ராமகிருஷ்ணமடம் தலைவர் சுவாமி நித்ய தீபானந்தா குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். அருகில் இடமிருந்து ஜெயபாரத் ஹோம்ஸ் நிர்வாக இயக்குனர் ஜெயக்குமார், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஆர்.பி. உதயகுமார், அனுஷத்தின் அனுக்கிரகம் நிறுவனர் நெல்லை பாலு, வழக்கறிஞர் புதூர் ராமகிருஷ்ணன், நந்தினி ரியல் எஸ்டேட் அதிபர் எம்.ஆர். பிரபு, ஆடிட்டர் சேது மாதவா ஆகியோர் உள்ளனர்.


KRT
K.R THANGA MAALIGAI
GOLD • DIAMOND • PLATINUM • SILVER
திரு உத்தரகோச மங்கை திருக்கோவில்
மகா கும்பாபிஷேக
விழாவிற்கு வருகை தரும்
பக்த கோடிகளை
வருக! வருக!! என
வரவேற்கிறோம்
KRT
K.R THANGA MAALIGAI
GOLD · DIAMOND · PLATINUM · SILVER
K.R.தங்கமாளிகை
மகிழ்ச்சியான தருணங்களுக்கு உங்கள் KRT
98, சாலை தெரு, இராமநாதபுரம் - 623501.
PH : 88256 - 57248, 91596 - 00007 www.krtjewellry.com
CAR PARKING AVAILABLE